விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 06 புதன்கிழமை (19.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 121

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# இயல்புநிலை திரும்பும் வரை நேரடிப் பேச்சுக்கள் இல்லை

## விடுதலைப்புலிகள் அறிவிப்பு



(கிளிநொச்சி)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் இயல்பு நிலை ஏற்படும் வரை ஜெனீவாப் பேச்சுக்குச் செல்ல முடியாது என விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின்நிலைப்பாடு தொடர்பாக ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமது நிலைப்பாடுகள் குறித்து முடிபுகளை சமாதானத்தூதுவர் ஜோன் ஹன்சன் பெளயரிடம் உத்தியோக பூர்வமாக நாளை அறிவிக்கவுள்ளதாக அவர் கூறினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொய்யாத்தோட்டத்தில் இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்ட பாலச்சந்திரன் றெஜினோல்ட் றொசாந்தன் (வயது 26) என்ற இளைஞன் நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம், படம் பார்த்துக் கொண்டிருந்தபோதே மோட்டார் சைக்கிளில் வாயை கறுப்புத் துணியால் கட்டிய நிலையில் வந்த இருவர் வீட்டினுள் புகுந்து தனது பாட்டியாருடன் படம் பார்த்துக்கொண்டிருந்த றொசாந்தனை துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

அவரது தாயார் இணுவில் வைத்தியசாலையில் தாதி உத்தியோகத்தராகக் கடமை



யாற்றி வருகிறார். வெளிநாட்டுக்குச் செல்லும் முயற்சியில் இவர் ஈடுபட்டிருந்த வேளையில் சுடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(து-133)

## இயல்பு நிலையை ஏற்படுத்த நோர்வே தீவிரம்

## இன்று ஜனாதிபதியை சந்திக்கும் பெளயர் நாளை கிளிநொச்சிக்கு செல்கிறார் !

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுக்கான சமாதான முயற்சிகள் மிகமோசமான நெருக்கடி நிலையினை சந்தித்திருக்கும் இவ்வேளையில் அமைதி முயற்சிகளுக்கு அனுசரணைப் பணியினை வழங்கிவரும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பெளயர் நேற்று மாலை 3மணியளவில் திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு கொழும்பை வந்தடைந்தார்.

இவர் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட அரசாங்க தரப்பினரைச் சந்திக்கும் முயற்சியில் ஈடுபடுவார் என்றும் நாளைய தினம் கிளிநொச்சி சென்று விடுதலைப்புலிகளை சந்திக்க இருப்பதாகவும் இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் பேச்சாளர் ளிக் தெரிவித்தார்.

இதேவேளை பெளயர் கண்காணிப்புக் குழுத்தலைவரையும் சந்தித்து தற்போதைய நெருக்கடி சூழ்நிலை குறித்து விரிவாக கலந்துரையாடவுள்ளதாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

அது எப்படி(12 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனின் சடலம் வவுனியாவில் மீட்பு

(வவுனியா)

வவுனியாவில் இனந் தெரியாத இளைஞர் ஒருவரது சடலம் வெட்டுக்காயங்களுடன் நேற்று மீட்கப்பட்டது. வவுனியா கண்டி வீதி மூன்று முறிப்பு பகுதியில் மதகுவைத்த குளம் வீதியில் கண்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்ட இச் சடலத்தை வவுனியா மாவட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

தரம் -5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வவுனியாவில் கிளைமோர் பொலிஸ் கான்ஸ்டபிள் பலி

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் கைக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகிய காவலரண் ஒன்றிலிருந்த பொலிஸாருக்கு உதவி வழங்குவதாகச் சென்ற பொலிஸார் மீது நேற்று முன்தினமிரவு நடாத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட காவலரணுக்கு சென்று விட்டுத் திரும்பி வரும்போது பொலிஸ் ஜீப் வண்டி மீது நடாத் தப்பட்ட இத் தாக்குதலில் அவ் ஜீப் வண்டியின் சாரதி அவ்விடத்திலேயே கொல்லப்பட்டார். இச் சம்பவத்தைத் தொடர்ந்து பூந்தோட்டப்பிரதேசத்தை இராணுவத்தினர் நேற்றுக் காலை சுற்றிவளைத்து தேடுதல் நடாத்தினர். இதனால் அங்கு பதற்ற சூழ்நிலை காணப்பட்டது. (ச-4)

## ஆயுதக்குழுவைச் சேர்ந்த மூவர் புலிகளால் சுட்டுக்கொலை

### மேலும் ஒருவர் ஆயுதங்களுடன் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பிரதேசத்தில் தமிழீழவிடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதங்களுடன் ஊடுருவித்தாக்குதலுக்கு திட்டமிட்டிருந்த துணை ஆயுதக்குழுவைச் சேர்ந்த மூவரை தாம் சுட்டுக்கொன்றதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு மாவட்டம் வாகனேரிப்பிரதேசத்தில் உள்ள பெண்டுகல்சேனையில் இடம்பெற்றதாக கூறப்படும் இச் சம்பவத்தின்போது குறிப்பிட்ட ஆயுதக்குழுவைச் சேர்ந்த மற்றுமொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் கிளைமோர் குண்டுகள் 2, (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.


எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தொடரும் வன்முறைகளால் ஜெனீவாப் பேச்சுக்கு ஆபத்து

## எரிக்சொல் ஹெய்ம் மீண்டும் தெரிவிப்பு

இலங்கையில் அதிகரித்து வரும் வன்முறைகளால் ஜெனீ



வாப் பேச்சுக்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் தெரிவித்துள்ளார். இலங்கை நிலைமைகள் வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் பாதுகாப்பு நிலைமைகளை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் நிலைப்படுத்தி ஜெனீவாப் பேச்சுக்களைப் பாதுகாக்கவேண்டும். அண்மைய வன்முறைகள் தொடர்பாக இலங்கை பொதுமக்கள் கண்காணிப் புக்குழு இலங்கை போர் நிறுத்த கண்காணிப் புக்குழு ஆகியவற்றின் அறிக்கையை நோர்வே எதிர்பார்த்துள்ளது.

இந்த அறிக்கைக்குப் பின்னர் அடுத்த முன்னெடுப்புகள் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளிடம் அறிவுரை கேட்கப்படும் என்று எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். இதனிடையே அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோகென்னவை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேசினார்.

தென் தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகளின் பயண ஒழுங்கு விடயத்தில் நிலவும் கடும் போக்கு தொடர்பில் இருவரும் விவாதித்தனர். (கு)

# தொழிலாளர் தினம்

தொழிலாளர்தினத்தைக் கொண்டாடுவதற்கு அரசியல் கட்சிகளும், தொழிற்சங்க அமைப்புகளும் தயாராகி வருகின்றன.

உலக தொழிலாளர் தினம் மே மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அன்றைய தினத்தில் ஊர்வலங்களையும், கூட்டங்களையும் நடத்துவதற்கான இடங்கள் ஒதுக்கிக் கொள்வது பற்றி அரசியல் கட்சிகளின் தலைவர்களும், தொழிற்சங்கப் பிரதிதிகளும் ஆராய்ந்து வருகிறார்கள். (கு-7)

# பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப்போட்டி

(யாழ்ப்பாணம்)

பத்தரமுல்லை கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய கடவத்தையிலுள்ள வரையறுக்கப்பட்ட கலர் புறோக்ட்ஸ் நிறுவனத்தினர் ஒழுங்குசெய்த 'ஹோம்ரன்' 'சிசு பம்பசர' அகில இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப் போட்டியை இவ்வாண்டு நடத்தவுள்ளனர்.

இது தொடர்பான சுற்று நிருபத்தினை குறித்த நிறுவனம் மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், சித்திர ஆசிரிய ஆலோசகர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியில் இலங்கையிலுள்ள சகல படசாலை மாணவர்களும் பங்குபற்ற முடியும். இப் போட்டி நான்கு பிரிவுகளாக பிரித்து நடைபெறவுள்ளது.

தரம் 1, தரம்2 மாணவர்கள் ஆரம்பப்பிரிவு தரம் 3, தரம்4, தரம் 5, ஆரம்ப இடைநிலைப் பிரிவிலும் தரம் 6, தரம் 7, தரம்8 தரம் 9 மாணவர்கள் கனிஷ்ட பிரிவிலும், தரம் 10, தரம் 11, தரம் 12, தரம்13 மாணவர்கள் சிரேஷ்ட பிரிவிலும் உள்ளடக்கப்படுவார்கள்.

ஆரம்பப்பிரிவு மாணவர்கள் 'எனது மனதைத் தொட்ட சூழல்' 'பெரியோரை கனம் பண்ணல்' 'எனது பூந்தோட்டம்' என்ற கருப்பொருளை மையமாக கொண்டும் ஆரம்ப இடைநிலை பிரிவு மாணவர்கள் 'அநாதைகளுக்கு உதவுவோம்' 'பாடசாலைவிளையாட்டுப் போட்டி' 'சூழலைச் சுத்தமாகவைத்திருப்போம்' என்ற கருப்பொருளை மையமாக கொண்டும் கனிஷ்ட பிரிவு மாணவர்கள் வீட்டுத் தோட்டம் 'எமக்கு உதவும், தலதா பெரகர/கிறிஸ்தவவிழா/ வேல்விழா/ நகரம்' 'தென்னந்தோட்டத்தில் தோங்காய் பிடுங்குதல்' சிரேஷ்ட பிரிவு மாணவர்கள் 'தொழிலாளர் நாட்டின் உயிர்நாடி' 'நீராடும் ஸ்தலம்' 'கலாசாரத்தைப் பாதுகாப்போம்' 'எமதுகுழந்தைகளுக்கு நாம் முன்மாதிரியாக இருப்போம்' 'மிருகங்கள் நடமாடும் காடு' என்னும் கருப்பொருளைமையமாக கொண்டு சித்திரங்களை வரைய வேண்டும்.

வரையப்படும்வரைதாள்18" X14" அங்குலங்களாக இருத்தல் வேண்டும். மேற்படி பிரிவுகளுக்குட்பட்ட மாணவர்கள் எத்தனை ஆக்கங்களையும் அனுப்பமுடியும். இவ் வாக்கங்கள் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக ஹோம்' ரன் 'சிசு பம்பசர' ஓவியப் போட்டி 2006, இல 437/4 றாகம வீதி, தபால் பெட்டி இல 10, கடவத்தை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இப் போட்டியில் வெற்றீயிட்டுபவர்களுக்கு சான்றிதழ்களும் பெறுமதிமிக்க பரிசுகளும் வழங்கப்படும் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு முதல்பரிசு 5 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசு 4ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசு 3ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். ஆரம்ப இடைநிலை பிரிவு மாணவர்களுக்கு-முதலாம் பரிசு 6ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசு 5 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசு 4 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

கனிஷ்ட பிரிவுமாணவர்களுக்கு முதலாம் பரிசு 7ஆயிரம் ரூபாவும், இராண்டம் பரிசு 6ஆயிரம் ரூபா, மூன்றாம் பரிசு 5ஆயிரம் ரூபாவும், சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்கு முதலாம் பரிசு 10ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசு 9ஆயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசு 8 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுவது டன் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் வெற்றியீட்டிய 25 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு மொத்தம் 100 வெற்றியீட்டிய மாணவர்களுக்கு ஆயிரம் ரூபா சிறப்புப் பரிசும் வழங்கப்படும்.

இதனைவிட ஒவ்வொரு பிரிவிலிருந்தும் வெற்றியீட்டிய 50 மாணவர்கள் தெரிவுசெய்யப் பட்டு மொத்தம் 200 வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவிலிருந்தும் வெற்றியீட்டிய 125 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு மொத்தம் 500 மாணவர்களுக்கு திறமைப் பரிசில்கள் வழங்கப்படும். இப் போட்டியில் முதற்பரிசினைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களின் பாடசாலைக்கு நான்கு கணனிகள் வழங்கப்படும்.

இப்போட்டியின் பரிசளிப்பு விழா இவ்வருடம் உலக மாணவர்கள் தினமான ஒக்டோபர் முதலாம் திகதி காலை10.00மணிக்குபதுளை நகரில் நடைபெறும். (க்-133)

# இராசி பலன்

19.04.2006

(சித்திரை 6 , புதன் கிழமை)

சித்திரை முன்னிரவு 9.06மணிவரை

மூலம் பிற்பகல் 1.44மணிவரை

இராகுகாலம் 12.02-1.32மணிவரை

சுபநேரம் 4.32-6.02மணிவரை

- **மேடம்:** ஆன்றோர் ஆசி, உடல்உழைப்பு, புதிய திட்டமிடல், வீண்பயம்.
- **இடபம்:** எதிர்பாராத அச்சம், உடல்நலக் குறைவு, காரிய் தடங்கல், மரியாதைக்குறைவு.
- **மிதுனம்:** திடீர் பயணம், அபூர்வசந்திப்பு, பொருள் சேர்க்கை, விருந்துபசாரம்.
- **கடகம்:** சுகவாழ்வு, சத்துருஜெயம், செய் தொழில் விருத்தி, முயற்சி கைகூடும்.
- **சிங்கம்:** தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, வியாபார சேர்க்கை, போசனசுகக்குறைவு,
- **கன்னி:** கல்வியில் ஆர்வம், ரோகபயம், உறவினர் சந்திப்பு, வாக்குமேன்மை.
- **துலாம்:** இனிய சம்பவம், அன்னியர் சந்திப்பு, முயற்சி கைகூடும், பணவருவாய்.
- **விருச்சிகம்:** மாதர் நட்பு, தொழில் விருத்தி, பொருள் விரயம், பிரயாணம்.
- **தனுசு:** நல்லமுயற்சி, ஆழ்ந்தசிந்தை, சயன சுகம், நண்பர்கள் சந்திப்பு.
- **மகரம்:** உணர்ச்சிவசப்படல், எடுத்தகாரியம் தாமதமாகும், சயனசுகக்குறைவு, பணவிரயம்.
- **கும்பம்:** தொழில்விருத்தி, முயற்சி பலிதம், சகோதரர் உதவி, பெருமையடைதல்.
- **மீனம்:** கடின உழைப்பு, நல்ல செய்தி, மேன்மை, காரிய அனுகூலம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
-வளவன்

# அநாதரவாகக் கைவிடப்பட்டோருக்கு புனர்வாழ்வளிக்க அரசாங்கம் நடவடிக்கை

தெருவோரங்களில் அநாதரவான நிலையில் கைவிடப் பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை கௌரவமான முறையில் சமுதாயத்தில் வாழ வைக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் முதல்கட்டமாக தெருவோரங்களில் அநாதரவான நிலையில் கைவிடப்பட்டுள்ள மக்களுக்கான இத்திட்டம் கொழும்பு நகரை மையமாகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பின்னர் நாட்டிலுள்ள ஏனைய நகரங்களுக்கும் இத்திட்டம் பரவலாக்கப்படவுள்ளது. இந்த வகையில் கொழும்பு நகரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 23 குடும்பங்களுக்கான வீடுகளும், வீடுகளுக்கான உபகரணங்களும் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கான உபகரணங்களும் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை சமூக சேவைகள் மற்றும் சமூக வளத்துறை அமைச்சில் நடைபெற்றது. (கு-7)

# மீண்டும் முழுமையான யுத்தம்; உல்ப் ஹென்றிக்சன் கவலை

இலங்கையில் வன்முறைகள் தொடர்வதன் மூலம் முன்னைய இரு தசாப்தகால முழுமையான யுத்தச் சூழ்நிலை திரும்பும் என்று போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் கவலை தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் றொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த நேர்காணலில் இலங்கையின் அனைத்து இன மக்களினது நிலைமை தொடர்பில் கவலை கொள்கிறோம். ஒவ்வொரு சிறு கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலுக்கும் யார் பொறுப்பு என்பதை சொல்ல முடியாது. கடந்த வன்முறைகளின் தன்மைகளைப் பார்த்தால் யார் பொறுப்பு என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

விடுதலைப் புலிகள் விடுத்திருந்த கோரிக்கையை ஏற்று அரசாங்கம் உலங்குவானூர்த்தியை ஒழுங்கு செய்திருந்தால் இத்தகைய நிலைமையைத் தவிர்த்திருக்கலாம். இரு தரப்பினரையும் நான் குற்றம் சாட்டுகிறேன். பேச்சுக்களில் எட்டப்பட்ட உடன்பாட்டை இருதரப்பும் செயற்படுத்தாவிட்டால் ஜெனீவாப் பேச்சுக்கள் சிறப்பானதாக இருக்காது.

வன்முறைகள் மிகவும் மோசமடைந்துள்ளது. இரு தசாப்தகால முழுமையான யுத்தம் மீண்டும் திரும்புவதையே இது காட்டுகிறது. பதில் தாக்குதல்கள் என்பன நிலைமையை செழுமைப்படுத்தாது. அது மக்களைத்தான் படுகொலை செய்யும் அது இராணுவ ரீதியான வெற்றி அல்ல என்றார் உல்ப் ஹென்றிக்சன். (கு)

# இலவச வைத்திய முகாம்





(கிளிநொச்சி)

தியாகச்சுடர் அன்னைபூபதியின் 18ஆவது ஆண்டு நினைவாக மட்டகளப்பு மாவட்ட தமிழீழ மருத்துவப் பிரிவினர் பின்தங்கிய பிரதேச மக்களின் அடிப்படை தேவைகளை கருத்திற்கொண்டு இலவச வைத்திய சேவைகளை நடாத்தி மக்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றன. கடந்த சனிக்கிழமை மணிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மாவட்ட மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரவி மோகன் தலைமையில் இலவச வைத்திய சேவை இடம்பெற்றது.

இதனை தலைமைச் செயலகப் பொறுப்பாளர் அமுதன் ஆரம்பித்து வைக்க மருத்துவப் பிரிவைச் சேர்ந்த வைத்தியர்களான வேணியன், அன்பு, காந்தகுமார் ஆகியோரும் மற்றும் மருத்துவப் போராளிகளான அகதினி, குட்டி விடுதலை, ஜீவன், வீரப்புலி போன்றவர்களும் 500ற்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு சிகிச்சை அளித்தனர்.

வைத்தியசேவையில் குழந்தை, மருத்துவம் பல்வைத்தியம் குருதிப்பரிசோதனை பொதுவான மருத்துவம் என்பன இடம்பெற்றுள்ளன. (கு)

### யாழ் நகரில் மனிதநேய அமைப்புக்களின் ஹர்த்தால்

கீழே கையொப்பமிட்டுள்ள; யாழ் நகரில் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்களும் சர்வதேச அமைப்புக்களும், சமீபத்தில் கரித்தாஸ் - கியுடெக் நிறுவன பணியாளர்கள் இருவர் கிளேமோர் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டதையும் தற்போது நடைபெற்று வரும் வன் செயல்களையும் எதிர்க்கின்றோம்.

இவற்றில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நாம் எமது பணிகளை சித்திரை மாதம் 19ம் திகதி புதன்கிழமை அன்று இடைநிறுத்தி வைத்துள்ளோம்.

நாம் எமது திட்ட செயல்கள் நடைபெறும் சகல இடங்களுக்கும் சென்று வருவதற்கும் எமது பணியாளர்களின் பாதுகாப்பிற்கும், அவர்கள் சுயமாக சென்று வருவதற்கும் வழிவகுக்குமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் வேண்டுகின்றோம்.

நாம், சம்பந்தப்பட்ட அனைவரும், சர்வதேச மனித நேய சட்டங்களுக்கான தமது கடப்பாடுகளை மிகவும் கடுமையாக கடைப்பிடிக்கவும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்வும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

### Humanitarian Agencies' Hartal in Jaffna

We, undersigned NGOs and international agencies working in Jaffna, protest against the killing of 2 Caritas-Hudec staff members in a Claymore mine explosion and the recent escalation of violence.

We will suspend our movements on the field today Wednesday 19th of April in sign of solidarity with the victims.

We urge all those concerned to allow full access to all project sites and to promote the safety, security and freedom of movement of our staff.

We expect and encourage all parties concerned to comply strictly with their obligations under International Humanitarian Law and to respect Human Rights.

**Nonviolent Peaceforce Sri Lanka**

PARC Pacific Asia Resource Center アジア太平洋資料センター

ACTION CONTRE LA FAIM ACF INTERNATIONAL NETWORK

gtz

movimondo

CARITAS

motivation quality of life

HUDEC

FORUT

COUNCIL OF NGOs, JAFFNA.

*Centre for Peace & Reconciliation*

(C-307)

**United Nations**
**Office of the Resident Co-ordinator**
Colombo, Sri Lanka

### இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி / மனிதநேய செயற்பாடுகளுக்கான இணைப்பாளரின் அறிக்கை

இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி / மனிதநேய செயற்பாடுகளின் இணைப்பாளர் அதிகரித்துவரும் வன்முறைகளின் காரணமாக காவு கொள்ளப்பட்ட இரு மனிதநேய பணியாளர்கள் உட்பட இலங்கைவாழ் மக்களின் உயிரிழப்பிற்கு ஆழ்ந்த மனவருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறார்.

இத் தொடர் சம்பவங்களின் வரிசையில் மூன்றாவதாக மனித நேயப் பணியாளரான பிரித்தானிய பிரஜை ஒருவரும் அவரது குடும்பத்தினரும் கடந்த செவ்வாய்க் கிழமை திருகோணமலை மாவட்டத்தில் நடந்த சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

இத்தகைய சம்பவங்கள் சுனாமியாலும் போராலும் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மனிதநேயப் பணிகளை முன்னெடுப்பதற்கு மறைமுக அச்சுறுத்தலாக உள்ளன.

### Statement from the UN Resident/Humanitarian Co-ordinator in Sri Lanka

The UN Resident/Humanitarian Co-ordinator in Sri Lanka deplores the latest spate of violence which has claimed the lives of a number of Sri Lankans including two humanitarian aid workers.

A third humanitarian aid worker - this time a British national and her family - sustained injuries in Tuesday's incident in Trincomalee district.

Such acts potentially threaten humanitarian operations in the most vulnerable areas affected by the tsunami and the conflict.

PARC Pacific Asia Resource Center アジア太平洋資料センター

ACTION CONTRE LA FAIM ACF INTERNATIONAL NETWORK

gtz

movimondo

CARITAS

motivation quality of life

HUDEC

FORUT

COUNCIL OF NGOs, JAFFNA.

*Centre for Peace & Reconciliation*

### தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில்

## தமிழர் தேசிய இயக்கத்தின் நிலைப்பாடு என்ன? நெடுமாறன் விளக்கம்

தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் தமிழர் தேசிய இயக்கத்தின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து அக்கட்சித் தலைவர் பழ.நெடுமாறன் விளக்கியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழர் தேசிய இயக்கம் தடை செய்யப்பட்டது குறித்தும் அதன் முக்கிய நிர்வாகிகளுக்கு வாய்ப்பூட்டுப் போடப்பட்டு எங்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டது குறித்தும் எந்தக் கட்சியும் கண்டனக் குரல் எழுப்பவில்லை.

தமிழ்த் தேசிய அமைப்புகளும் தமிழுணர்வாளர்களும் மட்டுமே இக்கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்குப் பிறகு கொடிய பொடா சட்டம் விலக்கிக்கொள்ளப்படும் என எதிர்பார்த்தோம். ஆனால் பொடா சட்டத்திற்குப் பதிலாக சட்டப்புறம்பான நடவடிக்கைகள் தடுப்புத் திருத்தச் சட்டம் என்ற பெயரில் பொடா சட்டத்தின் பல பிரிவுகளை உள்ளடக்கிய புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது.

இதற்கும் பொடா சட்டத்திற்குமிடையே அதிக வேறுபாடு இல்லை. முன் திகதியிட்டுப் பொடா சட்டம் விலக்கிக் கொள்ளப்படாததாலும் பொடா மறு ஆய்வுக் குழுவின் தீர்ப்பே இறுதியானது எனக் கூறப்பட்டதாலும் எங்கள் மீதும் மற்றும் பலர் மீதும் உள்ள பொடா வழக்குகள் இன்னமும் தொடர்கின்றன.

மேலும் சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய ஆதரவை எந்தக் கட்சியும் கேட்கவில்லை. நாம் இயங்கமுடியாது முடக்கப்பட்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில் நமது இயக்கம் தேர்தலில் நேரடியாகப் பங்கு கொண்டு பிரசாரம் செய்தல், வேலை செய்தல் போன்றவைகளுக்கான அவசியம் அறவே எழவில்லை.

பயிற்சி மொழி, ஆட்சிமொழி, நீதிமன்ற மொழி, வழிபாட்டு மொழியாகத் தமிழை ஆக்குதல், காவிரி, பெரியாறு, பாலாறு போன்ற ஆறுகளில் நமக்குள்ள நியாயமான உரிமைகளை நிலைநாட்டுதல், தமிழீழ விடுதலைப் போராட்டத் திற்கு ஆதரவு தருதல், சர்வாதிகாரப் போக்கினை எதிர்த்து ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுதல் போன்ற குறைந்தபட்ச அடிப்படைக் கோரிக்கைகளுக்காகக் குரல்கொடுக்க முன்வரும் வேட்பாளர்களை ஆதரித்து வாக்களித்து ஜனநாயகக் கடமையை நிறைவுசெய்யுமாறு இயக்கத் தோழர்களையும் தமிழ் உணர்வாளர்களையும், வாக்காளப் பெருமக்களையும் வேண்டிக்கொள்கிறேன் என்று பழ.நெடுமாறன் அதில் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் கட்சியின் நிலைப்பாட்டில் தனக்கு உடன்பாடு இல்லை என்றும் தி.மு.க கூட்டணியை ஆதரித்து உள்ளதாகவும் அறிவித்து தமிழர் தேசிய இயக்கத்திலிருந்து அதன் பொதுச்செயலாளர் பேராசிரியர் சு.ப.வீரபாண்டியன் விலகியுள்ளார். (க)

இந்திய வலம்

## சோனியாவிற்கு எதிராக பா.ஜ வேட்பாளர் ஸ்மிருதி இரானி!

(லக்னோ)

ரேபரேலி தொகுதியில் சோனியாவிற்கு எதிராக ரீ.வி நடிகை ஸ்மிருதி இரானியை களமிறக்க பாரதீய ஜனதா திட்டமிட்டுள்ளது.

ஆதாயம் தரும் பதவி விவகாரத்தில் சிக்கிய காங்கிரஸ் தலைவர் சோனியா, தனது எம்.பி பதவியையும், தேசிய ஆலோசனைக் குழுத் தலைவர் பதவியையும் இராஜினாமா செய்தார்.

இதனைத் தொடர்ந்து சோனியா எம்.பியாக தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தரப்பிரதேச ரேபரேலி தொகுதியில் அடுத்தமாதம் 8 ஆம் திகதி இடைத்தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இந்த தேர்தலில் போட்டியிட ஏதுவாக காங்கிரஸ் தலைவர் சோனியா நேற்று முன்தினம் வேட்புமனுத்தாக்கல் செய்தார். மாநிலத்தில் ஆளும் சமாஜ்வாடி கட்சி சார்பில் ராஜ்குமார் சவுத்ரி என்ற புதுமுக வேட்பாளர் சோனியாவிற்கு எதிராக நிறுத்தப்பட்டுள்ளார். இவர் சமாஜ்வாடி கட்சி எம்.பி பெனி பிரசாத் வர்மாவின் நெருங்கிய உறவினர்.




சோனியாவை எதிர்த்துப் போட்டியிடும் பாரதீய ஜனதா கட்சி வேட்பாளர் இன்னும் அறிவிக்கப்படவில்லை. அனேகமாக ரீ.வி நடிகை ஸ்மிருதி இரானியை சோனியாவிற்கு எதிராக களமிறக்க பா.ஜ.மேலிடம் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கட்சியின் தலைவர்கள் சுஷ்மா சுவராஜ், வினத் கத்தியார் ஆகியோரை நிறுத்தலாம் என முதலில் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் சோனியாவுடன் பலப் பரீட்சையில் ஈடுபட அவர்கள் முன்வரவில்லை. எனவே ரீ.வி நடிகை ஸ்மிருதி இரானியை பொம்மை வேட்பாளராக களமிறக்க பா.ஜ. திட்டமிட்டுள்ளது.

ஆனாலும் இதுகுறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு பின்னர் வெளியாகலாம் எனக் கூறப்படுகிறது. (க)

நர்மதா அணை விவகாரம் தொடர்பாக ஆமதாபாத்தில் தர்ணா போராட்டம் நடத்திய குஜராத் முதல்வர் மோடிக்கு உதய்தாக்ரே சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.



## பெண்ணாக வந்து ரீ.வியில் பேட்டி கொடுக்கும் ஆண்

(கராச்சி)

பாகிஸ்தான் ரீ.விக்களில் பெண்ணாக வந்து அரசியல்வாதிகள் முதல் பல தரப்பினருடன் பேட்டி கண்டுவருகிறார் அலி சலீம்.

கராச்சியைச் சேர்ந்தவர் அலிசலீம். பெண்ணாக பிறக்கவில்லையே என்று இவர் சிறுவயதில் நினைத்ததுண்டாம். ஆனால் பெரியவனான பின்னர் அவர் பெண்ணாக மாறி பிரபலமாகிவிட்டார்.

பெண்ணாக மாறினார் ,என்றால் உடலளவில் மாறவில்லை. மேடைகளில் பெண் குரலில், பெண் உடை உடுத்தி கலக்குவார். இப்படியே பெண் உடை உடுத்தி பெண் குரலில் பேசி ரீ.விக்களிலும் பேட்டி, கலந்துரையாடல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி கலக்கி வருகிறார்.

ஷிபான் உடையில் வரும் இவரின் இப்போதைய பெயர் பேகம் நவாசிஸ் அலி. அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், பத்திரிகையாளர்கள் என்று பலதரப்பினருடன் இவர் ரீ.வி ஷோக்களில் பங்கேற்று வருகிறார்.

மக்களிடம் இவர் ஷோக்கள் பிரபலமாகிவிட்டன. பலரும் இவர் நடத்தும் இத்தகைய ஷோவை விரும்பிப் பார்க்கின்றனர். ஆண் ஆதிக்கம் அதிகம் உள்ள ஒரு நாட்டில் இப்படி பெண் குரலில் பேசிக் கலக்குவது பலருக்கும் வியப்பைத் தருகிறது. எப்படித் தோன்றியது பெண்ணாக மாறி ஷோ நடத்த வேண்டும் என்று? இது தான் வியப்பு மேலிடும் விஷயம்.

இதுபற்றி இவர் கூறுகையில்,

ஆஸ்திரேலியாவில் டாம் எட்னா என்பவர் ஆணாக இருந்தாலும் பெண் குரலில் மேடைகளில் அசத்துவார். அவரைப் பார்த்த நான் அவர் போன்று நாமும் செய்யவேண்டும் என்று விரும்பினேன். அது மெய்த்து விட்டது. ஆனால் அவர் ஸ்டைல் வேறு. என் ஸ்டைல் வேறு என்கிறார். (க)



ரேபரேலி எம்.பி தொகுதியில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

## பா.ஜ.வில் அத்வானி இருக்கும் வரை நான் அந்தக் கட்சியில் இருக்கமாட்டேன்

### என்கிறார் மதன்லால் குரானா

(புதுடில்லி)

பாரதீய ஜனதா கட்சியில் இருந்து விலகுவதாக அக்கட்சியிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட மதன்லால் குரானா அறிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா கட்சியில் இருந்து நீக்கப்பட்ட உமாபாரதி டில்லியில் கட்சித் தலைவர்களுக்கு எதிராக பேரணி நடத்தினார்.

டில்லி முன்னாள் முதல்வரும் பா.ஜ. மூத்த தலைவர்களில் ஒருவருமான மதன்லால் குரானா அந்தப் பேரணியில் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தார். குரானாவின் இந்த நடவடிக்கை பா.ஜ.மேலிட தலைவர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. இதனை தொடர்ந்து மதன்லால் குரானா கட்சியில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டார். இந்நிலையில் நேற்று முன்தினம் டில்லியில் நிருபர்களைச் சந்தித்த குரானா பா.ஜ.விலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்தார். இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது,

பா.ஜ.கட்சியை எல்.கே.அத்வானி வழிநடத்திச் செல்வதால் அந்தக் கட்சியில் பணிபுரிய எனக்கு விருப்பமில்லை. பா.ஜ.வில் அத்வானிஇருக்கும்வரை அந்தக் கட்சியில் பணி புரிவதில்லை என்று முடிவு செய்து விட்டேன். கட்சி மற்றும் ஆர்.எஸ்.எஸ். மூத்த தலைவர்களுக்கு எனது முடிவை அறிவித்து விட்டேன். கடந்த 1999ஆம் ஆண்டு இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது. அதில் இருந்த பயணிகளை காப்பாற்ற மூன்று தீவிரவாதிகளை விடுவிக்கவேண்டும் என்று இந்திய அரசிற்கு கடத்தல்காரர்கள் நிபந்தனை விதித்தனர்.

அப்போது பிரதமராக இருந்த வாஜ்பாய் அரசு பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டு மூன்று தீவிரவாதிகளையும் விடுவித்தது. வாஜ்பாய் அரசின் இந்த முடிவில் எனக்கு உடன்பாடு இல்லை என்று அத்வானி தற்போது கருத்து தெரிவித்து வருகிறார்.

உண்மையிலேயே இந்த முடிவில் உடன்பாடு இல்லை என்றால் அப்போது உள்துறை அமைச்சராக இருந்த எல்.கே.அத்வானி தனது பதவியை ஏன் ராஜினாமா செய்யவில்லை? தன்னை ஒரு ஹீரோ போலவும் வாஜ்பாயை ஜீரோ போலவும் சித்தரிக்க அத்வானி முயற்சி செய்கிறார்.

பாகிஸ்தான் சென்ற எல்.கே.அத்வானி ஜின்னா பற்றி புகழ்ந்து பேசினார். தன்னை ஒரு மதச்சார்பற்ற தலைவர் என்று காட்டிக் கொள்ளவே ஜின்னாவை அத்வானி புகழ்ந்து பேசினார்.

இவ்வாறு மதன்லால் குரானா தெரிவித்தார். இதனிடையே அயோத்தியில் ராமர் கோவில் கட்டும் விஷயத்தில் பா.ஜ.தவறான வழியில் சென்றுவிட்டது என்று கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான சின்மயானந்த் குற்றச்சாட்டு தெரிவித்தார். (க)

# இஸ்ரேல் பிரதமர் பதவியை ஏரியல் ஷரோன் இழந்தார்

100நாட்களுக்கு மேல் கோமாவில் இருக்கும் ஏரியல் ஷரோன் இஸ்ரேலிய பிரதமர்பதவியைஇழந்தார். இஸ்ரேல்பிரதமராக ஏரியல் ஷரோன் பதவிவகித்து வந் தார். கடந்த ஜனவரி மாதம் 4ஆம் திகதி அவருக்கு திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டது.

மூளையில் ரத்தக்குழாய் வெடித்ததால் நினைவு இழந்தார். இதனால் அவருக்கு பலமுறை மூளையில் ஆபரேஷன் நடந் தது. என்றாலும் அவர் குணம் அடைய வில்லை. 100 நாட்களுக்கு மேலாக தொடர்ந்து கோமா நிலையிலேயே இருக் கிறார்.

இஸ்ரேல்நாட்டின் சட்டப்படிபிரதமர்தொடர்ந்து 100 நாட்களுக்கு மேல் செயல் பட முடியாத நிலையில் இருந்தால் அவர் தானாகவே பதவி இழந்துவிடுவார். அதன் படி ஷரோன் 100நாட்களக்கு மேல் செயல் படமுடியாமல் கோமா நிலையில் இருப்ப தால் நேற்று முன்தினம் அவர் பிர தமர் பதவியை இழந்தார்.

ஷரோனுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இடைக்கால பிர தமர் ஷரோன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டதில் இருந்து துணை பிரதமரான 60 வயது ஓல்மெர்ட் தற்காலிக பிரதமராக இருந்து பிரதமரின் பொறுப்புக்களை கவ னித்து வந்தார்.

ஷரோன் பதவி இழந்ததை தொடர்ந்து அவர் இடைக்கால பிரதமர் ஆகிஇருக்கி றார். இதற்கு இஸ்ரேல் மந்திரிசபை ஏற் கனவே ஒப்புதல் அளித்து விட்டது கடந்த மார்ச் 28ஆம் திகதி நடைபெற்ற இஸ்ரேல் பாராளுமன்ற தேர்தலில் ஓல் மெர்ட்டின் கதிமா கட்சி பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றது. எனவே அவர் விரைவில் புதிய அரசை அமைத்து பிரதமராக பதவி ஏற்றுக்கொள்வார். (கு)

WORLD NEWS
உலக தரிசனம்




நேபாளத்தில் மன்னராட்சியை எதிர்த்து போராட்டம் நடந்து வருகிறது. போராட்டத்தில் ஈடுபடுபவர்களை போலீசார் அடக்கி வருகின்றனர். காத்மாண்டுவில் போலீசாரின் அடியிலிருந்து தப்பிக்க போராட்டக்காரர் கள் இப்படி ஒருவர் மீது ஒருவர் விழுந்து கிடக்கின்றனர்.

# இந்தோனேஷியாவில் ரயில் விபத்து 14பேர் பலி, 12பேர் படுகாயம்

(ஜகர்த்தா)

இந்தோனேஷியா நாட்டில் மத்திய ஜாவா பகுதியில் நேற்று முன்தினம் அதி காலையில் 2 ரயில்கள் ஒன்றுடன்ஒன்று மோதிக்கொண்டன. குபுக் என்ற இடத்தின் அருகே இந்த விபத்து ஏற்பட்டது.

விபத்துக்குள்ளான அந்த இரு ரயில் களும் தலைநகர் ஜகர்த்தாவில் இருந்து நாட்டின் 2 ஆவது பெரிய நகரான சுரா பாயா நகரை நோக்கி சென்று கொண்டிருந் தன. ஒரே வழித் தடத்திலேயே சென்றுகொண் டிருந்த அந்த இரு ரயில் களும் மோதிக் கொண்டன.



சிக்னல் கிடைப்பதற்கு முன்பே ஒரு ரயில் புறப்பட்டு சென்றதால் மற்றொரு ரயிலுடன் மோதி விபத்து ஏற் பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ரயில் பெட்டிகள் ஒன் றுடன் ஒன்று மோதி நொறுங்கின.

ஒரு என்ஜின் மற்றும் பெட்டிகள் தண்ட வாளத்தை விட்டு இறங்கி வயலில் கவிழ்ந்தன.

இந்த விபத்தில் ரயில் என்ஜின் டிரைவர் உட்பட 14 பேர்பரிதாபமாக இறந்தனர். மேலும் 12பேர் படுகாயம் அடைந்து ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 3 பேரின் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது.

விபத்து பற்றிய தகவல் கிடைத்ததும் பொலிஸார் விரைந்து சென்று மீட்பு பணி யில் ஈடுபட்டனர். நூற்றுக்கணக்கான பயணிகள் காயமின்றி தப்பினர். விபத்தை அடுத்து அந்த வழியாக ரயில் போக்கு வரத்து நிறுத்தப்பட்டது. (கு)



அமெரிக்காவின் லோவா நகரில் வீசிய சூறாவளியால் வீடுகள் சிதைந்து போயின. சிதைவுகளை அப்புறப்படுத்தவும், மீண்டும் வீடுகளை சரி செய்யவும் அப்பகுதி மக்கள் முயற்சித்து வருகின்றனர்.

# அமெ.இராணுவம் - தீவிரவாதிகள் மோதல் - 2பேர் பலி 22பேர் காயம்

ஈராக் நாட்டின் மேற்கு பகுதியில் இருக் கும் அன்பார் என்ற இடத்தில் அமெரிக்க இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக் கும் இடையே கடும் சண்டை நடந்தது.

இதில் அமெரிக்க வீரர்கள் 2 பேர் பலி யானார்கள். மேலும் 22பேர் காயம் அடைந் தனர். இதனை அமெரிக்க இராணுவம் நேற்று முன்தினம் தெரிவித் தது. ஆனால் இந்த தாக்குதல் பற்றிய முழுவிவரமும் இன் னும் வெளியாகவில்லை.

ஈராக்கில் போர் தொடங்கிய காலம் முதல் இதுவரை அமெரிக்க இராணுவத்தி னர் 2ஆயிரத்து 370பேர் பலியாகி இருக் கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

அமெரிக்காவின் மிஸ் யு.எஸ்.ஏ.அழகிப் போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி பால்டி மோர் நகரில் நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ளும் பல்வேறு மாநில அழகிகள் இறுதிப் போட்டிக்கான ஒத்திகையில் கலந்து கொண்ட காட்சி. இதில் தேர்ந்தெடுக் கப்படும் மிஸ் அமெரிக்கஅழகி மிஸ் யுனிவர்ஸ் அழகி போட்டிக்கு அனுப்பப் படுவார்.




# ஆப்கானிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் முகாம்மீது குண்டு வீச்சு-41 பேர் பலி

ஆப்கானிஸ்தான் தெற்கு பகுதியில் தலிபான் தீவிரவாதிகளின் முகாம் மீது கடந்த வெள்ளிக்கிழமை ஆப்கான் பாது காப்புப் படையினர் அமெரிக்க இராணுவ ஹெலிகப்டர்கள் உதவியுடன் குண்டு களை வீசி தாக்குதல் நடத்தினர்.

அதோடு இரு தரப்பினர் இடையே கடும் துப்பாக்கிச் சண்டையும் நடந்தது. கந்த காரில் இருந்து 40 கிலோ மீற்றர் தொலை வில் உள்ள சாங்ஜிசார் என்ற இடத்தில் அதி காலை தொடங்கி மாலை வரையில் இந்த சண்டை நீடித்தது.

இந்த அதிரடி வேட்டையில் 41 தீவிரவாதி கள் கொல்லப்பட்டனர். இராணுவ தரப்பில் 6 பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்தனர். 9 பேர் காயம் அடைந்தார்கள். இந்தத்தக வலை கந்தகார் மாநில கவர்னர் அசதுல்லா காலிக் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சாங்ஜி சாரில் தலிபான்கள் கூடி கந்தகாரில் தாக் குதல் நடத்துவது பற்றி திட்டமிடுவதாக உள வுத்துறைக்கு தகவல் கிடைத்தது. அதனை அடுத்து இந்த தாக்குதல் நவடிக்கையை மேற்கொண்டோம் என்றார். (கு)

## மேகாலயாவில் நில நடுக்கம்

மேகாலயா மாநிலத்தில் இந்திய மியான்மர் எல்லையருகே நேற்று முன்தினம் நள்ளிரவு லேசான நில நடுக்கம் ஏற்பட் டது. அது 4.8 ரிக்டர் அளவில் பதிவானது. நில நடுக்கத்தினால் சேதம் ஏற்பட்டதாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இதேவேளை குஜராத் மாநிலத்திலும் நேற்று முன்தினம் லேசானபூமிஅதிர்ச்சிஏற்பட்டது மேற்கு குஜராத்தில் ஜாம்நகர் அருகே மையம் கொண்டிருந்த இந்த பூமி அதிர்ச்சி ரிக்கடர் அளவில் 3.6 ஆக பதிவாகி இருந்தது. (கு)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் -13

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:

01.சி.கார்த்திக் - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
02.க.ருபினி - யா/இந்து மகளிர் கல்லூரி.
03.ஆ.தமிழினி - யா/வல்லை அ.மி.த.க.பாடசாலை.
04.ந.நவநிதா - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
05.சி.பிரஷாத் - யா/வல்லை அ.மி.த.க.பாடசாலை.
06.த.ஆத்மன் - யா/சென் ஜோன் கல்லூரி.
07.இ.இனோசா - யா/அருணோதயக் கல்லூரி.
08.க.தனுசன் - யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
09.ச.தக்ஷாயினி - யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.
10.சூ.அருந்துசா - யா/வல்லை றோ.க.த.க.பாடசாலை.
11.யோ.டினோசன் - யா/வல்லை றோ.க.த.க.பாடசாலை.
12.சி.குபேரன் - யா/வல்லை அ.மி.த.க.பாடசாலை.
13.யே.தர்சிகா - யா/துணவி அ.மி.த.க.பாடசாலை.
14.சி.பிரணவி - யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை.
15.ஆ.கஜன் - யா/காரைநகர் தியாகராசா ம.ம.வித்தியாலயம்.
16.பி.டர்மினி - யா/துணவி அ.மி.த.க.பாடசாலை.
17.ப.அருண்ராஜ் - யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.
18.யோ.சுஜந்தன் - யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை.
19.சி.சுகிர்தா - யா/புனித ஜோன் பொஸ்கோ.
20.மு.மதுஷா - யா/ஞானாசாரியார் கல்லூரி.
21.ச.பவதாரணி - யா/புனித் ஜோன் பொஸ்கோ.
22.ஜே.தானுஷா - யா/இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.
23.மு.பிரசண்ணா - யா/ஞானாசாரியார் கல்லூரி.
24.ச.மிதுசா - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
25.ஸ்.அபிஷேக் - யா/கல்வியங்காடு இ.த.க.பாடசாலை.
26.நி.பகீரதன் - யா/துணவி அ.மி.த.க.பாடசாலை.
27.தே.தனோஜன் - யா/அத்தியார் இந்துக் கல்லூரி.
28.கி.ராகவி - யா/துன்னாலை தெற்கு அரசினர் த.க.பாடசாலை.
29.ஜெ.தீபிகா - யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
30.தி.நிரோஷன் - யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயம்.
31.ஆ.நந்தினி - யா/ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.
32.மி.சௌந்தர்யா - யா/வல்லை அ.மி.த.க.பாடசாலை.
33.க.தர்மிளா - யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.
34.க.கீர்த்திகா - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
35.செ.செந்தாரகா - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
36.கோ.ஆனந்தகிருஸ்ணன் - யா/சாவகச்சேரி இ.ஆ.பாடசாலை.
37.செ.கிருஸ்ணகுமார் - யா/துணவி அ.மி.த.க.பாடசாலை.
38.இ.கஸ்தூரி - யா/வதிரி திரு இருதயக் கல்லூரி.
39.சோ.சஞ்சயன் - யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.
40.ச.கீர்த்தனா - யா/ஞானாசாரியார் கல்லூரி.
41.க.ஹரிகரசர்மா - யா/புற்றளை மகா வித்தியாலயம்.
42.ந.யசோதா - யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.
43.சோ.யுகராஜசர்மா - யா/ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.
44.ந.லாவண்யா - யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை.

(0 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## வினாத்தாள் - 13 இன் விடைகள்

01. 2 02. 1 03. 1 04. 1
05. 1 06. 3 07.Kinger Fisher 08.Woodspeaker
09. 41 10.46 11. 10 12. 4
13. (2) 14. மதுரை 15. துணி 16. மணி
17. மரை 18. துரை 19. வாணி 20. மது
21.வயிற்றுக்கோளாறைப் போக்க 22. எதிரிகளிடம் தப்பிக்கொள்ள
23. 144 24. 58 25. 4 26. மூடி 1/2 சதம். போத். 1ரூபா 1/2 சதம்
27. 10,7 28. தவளை, ஆமை, பாம்பு 29. குரங்கு, அணில்
30.பல்லி, தவளை போன்றவை 31. கத்தும் 32. அதிகாலை
33. மழை, நீர் 34. இரவு வருதல் 35. புட்கள், பட்சிகள் 36. கிளை
37. காகம் 38. மான் 39. எருது 40. மயில்

அன்பான மாணவர்களே!
புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற வேண்டுமா?
ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் வலம்புரியில் வெளிவரும் புலமைப் பரிசில் பரீட்சை வினாப்பத்திரத்தை தவறவிடாதீர்கள்?

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 15

மாணவர் முழுப்பெயர் : ..............................
பாடசாலையின் பெயர் : ..............................
வீட்டின் முகவரி : ..............................

மாணவர்களே! உங்கள் விடைகளை 26.04.2006 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 15
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும் பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# ஐரோ. நாடுகளும் புலிகளை தடைசெய்ய வேண்டுமாம்!

## இலங்கை அரசு வலியுறுத்தி வருவதாக தகவல்

தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 25 நாடுகளை இலங்கை அரசாங்கம் வலியுறுத்தியுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் இதுபற்றி மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, கனடா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடை செய்ததைப் போன்று விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் வன்முறைகளால் ஐரோப்பிய நாடுகளும் அந்த அமைப்பைத் தடைசெய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அரசாங்கப் பேச்சாளர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் படுகொலையின் போது ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப்புலிகளின் பயணங்களுக்கு தடை விதிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் தாக்குதல் நடவடிக்கைகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளே.

இச்செயற்பாடுகள் குறித்தும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கவனத்திற்கு இலங்கை அரசாங்கம் கொண்டு சென்றுள்ளது என்றும், அரசாங்கத்தின் பேச்சாளர் தெரிவித்திருப்பதாக கொழும்பு ஊடகத்தின் செய்தி தெரிவிக்கிறது. (கு)

# கப்பம் பெற முயன்ற மூவர் கைது

தமிழ் வர்த்தகர் ஒருவருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்து ஒரு கோடி ரூபா கப்பம் பெற முயன்ற பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த 3பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புறக்கோட்டையைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் தனக்கு சொந்தமான வியாபார நிலையத்தை 7 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்துள்ளார். அவரிடமிருந்து பாதாள உலகக் குழுவினர் ஒரு கோடி ரூபாவை பெறுவதற்கு முயன்றுள்ளனர்.

இந்தப் பணத்திலிருந்து 60 இலட்ச ரூபா பணத்தினை சந்தேக நபர்கள் காசோலையாகப் பெற்றுக்கொள்ள முயன்ற போது கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாதாள உலகக் குழுவினர் தன்னிடம் ஒரு கோடி ரூபா கப்பம் கேட்பதாக அந்த வர்த்தகர் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு இயக்குனர் சரத் லூகொடவிற்கு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து விசேட பொலிஸ் குழு இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்தியது.

தமிழ் வர்த்தகர் 60 இலட்சம் ரூபாவை கப்பமாக வழங்க இணங்குவதாகக் கூறியுள்ளார்.

அதனைப் பெற்றுக்கொள்ள பாதாள உலகக் கும்பல் புறக்கோட்டையிலிருக்கும் விற்பனை நிலையத்துக்கு வந்தபோது அக்குழுவினரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (கு)


# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்


இல: 15 ஆக்கம்: மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய் ஹோ.க.த.க.பாடசாலை


வினாத்தாள் - I நேரம்: 45 நிமிடம்

**தரப்பட்டுள்ள படங்களுடன் தொடர்புடைய மூன்று சொற்களைக் கொண்ட பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**




01. 
(1) உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டி, அணிவகுப்பு
(2) உடற்பயிற்சி, அணிநடை, கண்காட்சி
(3) உடற்பயிற்சி, அணிநடை, அணிவகுப்பு

02. 
(1) காவல், குருவி, தோட்டம்
(2) பாதுகாப்பு, வெருளி, காவல்
(3) குருவி, பாதுகாப்பு, வெருளி

03. 
(1) எரிபொருள், சக்கரம், இயந்திரம்
(2) இயந்திரம், சாரதி, சக்கரம்
(3) எரிபொருள், இயந்திரம், சாரதி

03. 
(1) நீர், நிலம், குட்டி
(2) முட்டை, நீர், நிலம்
(3) இறைச்சி, முட்டை, நீர்

**5-8 வரையான வினாக்களுக்கு படத்திலுள்ள கருவிகளின் பெயரை வெற்றிடங்களில் எழுதுக.**

(5)............... (6)............... (7)............. (8).............

**சரியான விடையைச் சுற்றிக் கட்டமிடுக.**

(9)மேலேயுள்ள படங்களிலுள்ளவை
(1) நரம்புக்கருவிகள் (2) கஞ்சக் கருவிகள்
(3) தோற் கருவிகள் (4) துணை கருவிகள்

(10)கிராமியப் பாடல்களுக்குப் பயன்படுத்தப்படும் இசைக்கருவியின் இலக்கம் (5, 6, 7, 8)

**கீழே தரப்பட்டுள்ள விவரணத்தை வாசித்துத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**


விமலாவின் வயது நாற்பது. கமலாவின் வயது நிமலாவின் வயதிலும் இரு மடங்காகும். கமலா விமலாவை விட 16 வருடங்கள் இளையவள்.

(11) நிமலாவின் வயது என்ன?

(12) கமலாவின் வயது 30 ஆகும்போது விமலாவின் வயது என்ன?

(13) பாமிலாவின் வயது நிமலாவின் வயதின் அரை மடங்காயின் பாமிலாவின் வயது என்ன?

**கீழே காட்டப்பட்டுள்ளது ஒரு குருவியின் கூடாகும்.**




(14) இக் கூட்டைக் கட்டும் குருவியின் பெயர் என்ன?
..........................

(15) இக்கூடு எதனால் கட்டப்பட்டுள்ளது?
..........................

(16) இக் கூட்டைக் கட்டியது ஆண் குருவியா? பெண் குருவியா?
..........................

(17) இதில் குஞ்சுகள் வசிக்கும் பகுதியைக் காட்டும் எழுத்து எது?
..........................

(18) பகுதி C நீளமாக அமைந்துள்ளதால் ஏற்படும் நன்மை யாது?
..........................

**சுருக்க விடை தருக.**

(19) உமது கிராமத்தில் சட்ட திட்டங்களை அமுல்படுத்த உதவி செய்யும் அரசாங்க உத்தியோகத்தர் யார்?
..........................

(20) வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் அருந்தும் பானம் எது?
..........................

**சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

(21) அதிகமான கால்களையுடைய பல்காலிப் பூச்சி
(1) நண்டு (2)சிலந்தி (3) மட்டத்தேள்

(22) 1, 2, 3, 4, 5 என்னும் குறியீடு பாதரசம் ஆயின்
பாதம் + ரசம் (1) 123+345 (2) 125+345 (3) 125+34

(23) கார்த்திகை மார்கழி என்பது போல
வியாழன் ((1) புதன் (2) சனி (3) வெள்ளி)

(24) கண்டி ((1) குணப்பெயர் (2) காலப்பெயர் (3) இடப்பெயர்)

(25) வயலில் சூடு வைத்தார்கள்
((1) வேலையாட்கள் (2) இராணுவத்தினர் (3) வேட்டைக்காரர்)

**கீழே தரப்பட்டுள்ள நீண்ட ஓசைச் சொற்களை குறுகி ஒலிக்கும் சொல்லாக்கி வசனம் எழுதுக.**


(26) காலை ..........................................

(27) பாடம் ..........................................

**கட்டமிடப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான உயிர் எழுத்துக்களை எழுதுக.**

(28) ☐ காயம் (29) ☐ டதம்

(30) ☐ சன் (31) ☐ ணான்



(32) இக்கூட்டிலுள்ள வட்டங்கள் எத்தனை?

(33) இக்கூட்டிலுள்ள கோளங்கள் எத்தனை?

**34-38 வரையான வினாக்களுக்கு 'அ' விலுள்ள கணிதக் குறியீடுகளை அவதானித்து பயிற்சிகளைச் செய்து 'ஆ' விலுள்ள சரியான விடையின் ஆங்கில எழுத்தை அருகிலுள்ள வெற்றுக் கூட்டில் எழுதுக.**

| | 'அ' | | | 'ஆ' | |
|---|---|---|---|---|---|
| (34) | 3x3+6-3÷4 | ☐ | | A | 5 |
| (35) | 4x2+10- 3÷3 | ☐ | | B | 4 |
| (36) | 6x3+17-7÷7 | ☐ | | C | 3 |
| (37) | 3x4+37-9÷5 | ☐ | | D | 7 |
| (38) | 2x12+28-3÷7 | ☐ | | E | 8 |

(39) மூன்று பென்சில்களின் விலை 12.00 ஆயின் ஒரு டசின் பென்சில்களின் விலை என்ன?

(40) மூன்று பந்துகளின் விலை 50.00 எனின் 15 பந்துகளின் விலை என்ன?

(0 ஆம் பக்கம் பார்க்க...)

# தடைகளை நீக்கி சுயநிர்ணய உரிமையை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்

## காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்

(கொழும்பு)



**தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடைகளை நீக்கி தமிழரது சுய நிர்ணய உரிமையைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும் என்று தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து ஊடகமொன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் கடந்த 57 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை அரசு சொல்வது ஒன்றாகவும் செய்வது ஒன்றாகவுமே செயற்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களுடன் மேற்கொண்ட பண்டா–செல்வா ஒப்பந்தம் முதல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ரணில் அரசாங்கத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் வரையில் எந்தவொரு ஒப்பந்தத்திலும் சொல்லப்பட்ட விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சர்வதேச நாடுகளால் முன்வைக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கூட இதற்கு விதிவிலக்காகவில்லை.

தமிழ் மக்களின் உரிமைகளை பறித்தெடுக்க இராணுவ மேலாதிக்க நிலையில் இலங்கை அரசு செயற்பட்டு வருகின்றது.

இன ஒழிப்புக்கான வேலைத்திட்டங்களை யாப்புக்கள் , சட்டங்கள் , திட்டமிட்ட குடியேற்றங்கள், பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் முன்னெடுத்துச்செல்ல இலங்கை அரசாங்கம் முனைகின்றது. அது மட்டுமன்றி அண்மையில் ஜெனீவாப்பேச்சுக்களின் போது சர்வதேச சமூகத்தின் முன் ஏற்றுக் கொண்ட விடயங்களை அரசு நடைமுறைப் படுத்தாது இராணுவ மேலாதிக்க வல்லான்மையைத் திரிவு படுத்திக்கூறுகின்றது.

இந்நிலையில் நோர்வேயோ சர்வதேச சமூகமோ அரசின் இதுவரையிலான இரட்டை வேட வரலாற்றை நன்றாகக் புரிந்துகொள்ள வேண்டும்.

இதனை மையமாகக்கொண்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் சாதாரணமாக அழுத்தம் கொடுப்பதால் ஒன்றும் நடைபெறப்போவதில்லை. எமது இயக்கத்தினை ஒரு இனத்துக்கான விடுதலை இயக்கமாக அங்கீகரித்து சுய நிர்ணய உரிமையையும் அங்கீகரித்து எம்மீதான தடைகளை நீக்கவேண்டும்.

ஒரு சில நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது தடை விதிப்பதால் சிங்களப்பேரினவாத அரசு எந்த வகையிலும் அரசியல் தீர்வுக்கு வரப்போவதில்லை. மாறாக அவர்கள் இராணுவத்தீர்வையே நாடுவர்."

புலிகள் மீதான தடை என்பது அவர்களுக்கு உற்சாகத்தைத்தான் கொடுக்கும். எனவே உடனடியாக எம்மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்கி எமது மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும்.

அண்மைய இலங்கையின் தேர்தல்களில் கூட தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் தான் தமது ஏகப்பிரதிநிதிகள் என்பதனை நிரூபித்துள்ளனர்.

தமிழீழவிடுதலைப்போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் தமிழ் மக்கள் எம்மை தமது ஏகப் பிரதி நிதிகளாக ஏற்று அதனை வெளிப்படுத்தியது மட்டுமல்ல அரசியல் அபிலாசைகளையும் வெளிப்படுத்தி வந்துள்ளனர் என்றார். (கு)

## ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு தொகை அதிகரித்து வழங்கும் நிகழ்வு





(கிளிநொச்சி)

மீள் குடியேற்றப்பட்ட பிரதேசங்களின் ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுத் தொகையை மலேசிய தமிழர் புனர்வாழ்வு கழக நிதி உதவியுடன் அதிகரித்து வழங்கும் நிகழ்வு ஒன்று நேற்று முன் தினம் இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக் கழக அனுசரணையுடனும் நிதிப்பங்களிப்புடனும் இயங்கி வரும் முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான மாதாந்த கொடுப் பனவு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முன்பள்ளி பிரதேச கட்டமைப்புத் தலைவர் திரு. வ.ஜீவரட்ணம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு அன்னை பூபதி அவர்களின் திருவுருவப் படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டதையடுத்து தேசியக்கொடி, தமிழர் புனர் வாழ்வுக்கழகக்கொடி, பச்சிளைப்பள்ளி புனர் வாழ்வு அபிவிருத்தி நிறுவனக்கொடி என்பன ஏற்றப்பட்டன. இதனையடுத்து மங்கள விளக் கேற்றப்பட்டது. தொடர்ந்து 30முன் பள்ளி ஆசிரியர்களுக்கு அதிகரித்த கொடுப் பனவு வழங்கப்பட்டது. (கு)

## தமிழ் மக்கள் மீதான சித்திரவதைகளை நிறுத்துக!

### த.தே.கூட்டமைப்புஅரசிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

தென் தமிழீழத்தில் தமிழர்களின் மீதான சித்திரவதைகளை நிறுத்த வேண்டும் என்று அரசாங்கத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கை யில்,

இலங்கையில்தமிழ் பேசும்மக்கள் மீதான அரச படைகளின் தாக்குதலுக்கு சர்வதேச சமூகம் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

ஜெனீவா பேச்சுக்களுக்கமைய துணை இராணுவக் குழுக்களினது ஆயுதங்களை மிகக் குறைந்த அளவிலே அரசாங்கம் களைந்துள்ளது.

இத்தகைய துணை இராணுவக் குழுக் களினால்தான் திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் மாமனிதர் விக்னேஸ்வரன் உள்ளிட்ட வடக்கு–கிழக்குத் தமிழ் மக்கள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் லொறிகளில் காடையர்களைக் கொண்டு வந்து திருகோணமலை நகரில் தமிழ் மக்கள் மீதான தாக்குதலை கடற்படையினர் நடத்தினர்.

மேலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான என் ரவிராஜையும் திருகோணமலை அபேயபுரவில் கடந்த வாரம் தாக்கியுள்ளனர்.

இத்தகைய தமிழர் மீதான தாக்குதல்களை அரசாங்கம் முடிவுக்குக் கொண்டு வர வேண் டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## அடிக்கல் நாட்டுவிழா

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் முல்லைத்தீவு கள்ளப்பாடு தீர்த்தக்கரை என்னுமிடத்தில் முன்பள்ளியு டன் இணைந்த பொது நோக்கு மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முதலாவது அடிக்கல்லினை ஹொலண்ட் மனித உரிமைகள்மைய அமைப்பைச் சேர்ந்த இந்திரன் நாட்டினார்.

தொடர்ந்து அடிக்கல்லினை தமிழர் புனர் வாழ்வுக்கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன் கிறிஸ்ரியும் சுனாமி வேலைத் திட்டப் பணிப்பாளர் றெஜியும் நாட்டினர். 68 இலட்சம் ரூபா பெறுமதியில் இக் கட் டம் அமைக்கப்படவிருப்பது குறிப் பிடத் தக்கது. (கு)



## வன்முறைகள் தொடர்வதற்கு துணை இராணுவக் குழுவினரே காரணமாம்

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை வன்முறைகளுக்கு துணை இராணுவக் குழவினரது ஆயுதங்களை அரசாங்கம் களையாததே காரணம் என்று ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நாடாளுமன்ற எதிர்க்கட்சி கொறடாவும் முன்னாள் சபாநாயகருமான ஜோசப் மைக்கேல் பெரேரா இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,

அண்மைய வன்முறைகளுக்கு துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்களை அரசாங்கம் களையாததே காரணம் .

வடக்கு–கிழக்குப் படுகொலைகள் குறித்து அரசும் புலிகளும் அமைதி காத்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் பயண ஒழுங்குக்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மறுத்தது. மற்றும் அமைதி முயற்சிகளின் தற்போதைய தேக்க நிலை ஆகியவற்றுக் கும் அரசாங்கமே காரணம் என்றும் ஜோசப் மைக்கேல் பெரேரா குறிப்பிட்டார். (கு)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(புதுக்குடியிருப்பு)

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் எனக் கல்லூரி அதிபர் பெ.க.சிவலிங்கம் தெரிவித்துள்ளார். (க–7)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை



### வழக்குரைஞராக 20

அதை நீ எப்படிச் செய்யலாம். என ஒரு வழக்கு வேலை இல்லாமல் இருந்தால் நீ இங்கு ஏன் வந்தாய்? என்ற சந்தேக வழக்கு குடியிருப்பு இடங்களைப் பற்றி வழக்கு வழக்குகள் வேடிக்கைகளாகத் தோன்றின. ஒரு ஆபிரிக்கன் தன் தாயும் தந்தையும் சூலு என்பதால் தான் சூலு என்பான். காவல்துறை இவன் நிறம் தலை முடி தோள்பட்டை சூலுவாகத் தோன்றவில்லை என வழக்குப்போடுவார்கள் மாஜிஸ்திரேட் முதுகைக்காட்டு எனக் கேட்டு விட்டு தோள்பட்டைகள் நெளிந்து தொங்கிக் காணப்படுவதால் இவர் சூலு அல்ல என்று தீர்ப்பளிப்பார் அத்தோடு அவன் தொலைந்தான்.

இதனால் என்ன? அவனுக்குள்ள பாஸ் ரத்தாகும் அனுதிச் சீட்டு இல்லை என்றால் கைதாவான். இதற்கு மேல் முறையீடு கிடையாது... இரண்யன் போல் அரசாண்டது தென்னாப்பிரிக்க வெள்ளை நிற வெளி அரசு!

பொதுமக்கள் மட்டுமல்லாது மண்டேலா போன்ற வழக்குரைஞர்களும் நிற வெறி என்ற எழுதக் கூசும் சட்டத்தால் துரத்தப்பட்டே வந்தனர்.

நீதிமன்றத்தில் வழக்குரைஞர் மண்டேலா கேட்ட கேள்விகளுக்கு வெள்ளைக்காரச் குற்றவாளிகளும் சாட்சிகளும் பதில் கூற மறுத்தனர்.

நீதிபதி அவர்களைக் கண்டிப்பதற்குப் பதிலாக அவர் அதே கேள்வியைக் கேட்டு பதிலைப் பெறுவார்.

இன்னொரு நீதிபதி மண்டேலாவை நீ வழக்குரைஞர் என்பதை என்னால் நம்ப முடிய வில்லை போய்ச் சான்றிதழைக்கொண்டுவா என அனுப்பி விட்டார்.

இவற்றை எதிர்த்து பல இடர்பாடுகளுக்கிடையில் மண்டேலாவும் டோம்போவும் நீதிமன்றங்களைப் போர்க்களமாகக்கருதிப் போராடிவந்தனர். வாதத் திறமையால் பல ஏழை ஆபிரிக்கா நிரபராதிகள் விடுதலை பெற உதவினர் ஓரளவு மன நிறைவும் இருந்தது வருவாயும் வந்தது.

ஒரு முறை வெள்ளைக்காரச் சீமாட்டி தன்னிடம் பணிபுரிந்து ஆபிரிக்கப் பெண் பாவாடையைத் திருடி விட்டதாக வழக்கைப் போட்டாள் பணிப் பெண்ணுக்காக வாதாடிய மண்டேலா வேண்டுமென்றே வெள்ளைக்காரச் சீமாட்டியின் உள் ஆடைகளைக் காட்டி இது உன்னுடையதா? எனக் கேட்டபோது அவள் கோபப்பட்டு இல்லை எனச் சொல்லி விட்டாள். பணிப்பெண் விடுதலை பெற்றாள் இதைச் சொல்லி மண்டேலா சிரிப்பது வழக்கம்.

### சோபியா நகரம்

ஜோகன்ஸ்பர்கிற்குத் தெற்குப் பக்கத்தில் அமைந்திருந்த சோபியா நகரம் பல்லாண்டுகளாக பல இன அபிரிக்கா மக்களும் சேர்ந்து வாழ்ந்து வந்த ஒரு சேரிப்பகுதி காலப் போக்கில் கடைகள் பெரிய விடுகள் தோன்றிவிட்டன. இதைக் கண்டு பொறாமைப்பட்ட வெள்ளையர்கள் தேசியக்கட்சி (நாஜி) மாலன் அரசு மூலம் சோபியா நகரம் வெள்யைருக்கான பகுதி என அறிவித்து அங்கிருந்த ஆபிரிக்க மக்களை அப்புறப்படுத்த நிர்ப்பந்தம் கொடுத்தனர். வெளியேற்ற உத்தரவும் சட்டமாக ஆக்கப்பட்டது. ஆக சில ஆயிரம் விடுகள் பறிமுதலாகும் சில ஆயிரம் மக்கள் எவ்வித நிவாரணமுமின்றி துரத்தியடிக்கப்படுவர்.

இந்த நகரத்தில்தான் தென்ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர் டாக்டர் சுமோ குடியிருந்து வந்தார். இங்கு ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் வாழ்ந்து வந்தனர். 1950 இல் வெளியேற்றச் சட்டம் கொண்டு வரப்பட்டிருந்தாலும் மக்களின் எதிர்ப்பால் 1953வரை நடவடிக்கை எடுக்க முடியாமல் அரசு இருந்து வந்தது.

மக்கள் கூடுவதற்குத் தடைச்சட்டம் விதிக்கப்பட்டது. அந்த நேரத்தில் மண்டேலாவுக்கும் வால்டருக்கும் போடப்பட்டிருந்த வாய்ப்பூட்டு நடமாட்டத் தடைச் சட்டம் முடிவுக்கு வந்திருந்தது.

கூட்டம் நடந்த போது 1200 பேர் எதற்கும் அஞ்சாமல் கூடினர். அதை விட அதிகமான எண்ணிக்கையில் துப்பாக்கி ஏந்திய போலீசார் வளையமிட்டனர். போலீசார் கைது செய்யவந்தபோது தடைச்சட்டம் தனக்குக் காலாவதியாகி விட்டதை மண்டேலா சொன்னார். எனவே போலீசார் விலகிச் சென்று விட்டனர். கூட்டத்திற்கு வரும் வழியில் காத்ரடாவையும் ராபர்ட் ரேசாவையும் கைது செய்து விட்டனர். கூட்டத்தினர் ஆத்திரத்துடன் பேசிக் கொண்டிருந்தனர். மண்டேலா மேடை மீது ஏறி மக்களின் உணர்ச்சியைத் தட்டிவிடுகிற முறையில் பேசியவர் அவரும் உணர்ச்சி வசப்பட்டு இனியும் பொறுத்திருக்க இயலாது. ஆயுதம் எடுக்கத் தயாராகுங்கள் எனப் பேசிவிட்டார். மக்களும் ஆரவாத்துடன் வீர முழக்கங்களை எழுப்பினார்கள்.

ஆனால் தென்னாபிரிக்கத் தேசிய காங்கிரசின் நிர்வாகக் குழு கூடி மண்டேலா பேசியது தவறு எனக் கண்டித்து மண்டேலாவும் ஏற்றுக்கொண்டார். அன்று முதல் பொது மேடைகளில் கட்சி முடிவுப்படி அமைதி போராட்டம் என்றே பேசிவந்தார்.

இந்தக் காலத்தில் மனதில் ஒரு பெரும் போராட்டம் நடந்து வந்தது இந்தியாவில் மகாத்மா காந்தியடிகள் சாத்விக முறை சத்தியாக்கிரகமே அமைதி வழி எனப் போராடி வந்தது இந்தியாவுக்கு சரி ஆனால் ஆபிரிக்காவுக்கு அப்படியே பொருந்துமா? இந்தியாவை அடிமைப் படுத்தி வெள்யைர்கள் ஆண்டாலும் அவர்கள் தூரப் பார்வையுடன் விஷயங்களை அணுகுபவர்கள் அவர்கள் அமைதி வழிப்போராட்டத்தை மதித்தார்கள். தென்னாபிரிக்காவை ஆண்ட வெள்ளையர்கள் (டச்சு நாஜிகள்) முற்றிலும் மாறுபட்டவர்கள் நாகரிகமற்றவர்கள் மனிதப் பண்பு இல்லாதவர்கள் எனவே தென்னாபிரிக்காவை ஆளும் எதிரி வெள்ளையன் இந்தியாவை ஆண்ட வெள்ளையனிடமிருந்து மாறுபட்டவன் தம்முடைய மக்களும் இந்திய மக்கள் அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. எனவே சாத்வீக முறை தமக்குப் பொருந்தாது. வேறுவகைப் போராட்டம் தேவை என்றே சந்தித்து வந்தார். இந்தக் கருத்தை தேசிய நிர்வாகக் குழு மறுத்த தோடு மண்டோலாவைக் கண்டித்தும் வந்தது.

1953 இல் வெள்ளையர்கள் சிலர் கூடி விபரல் கட்சியைத் தொடங்குவது பற்றிப் பேசி வந்தனர். அவர்களது கூட்டத்திற்கு தலைவர் லுதுலியும் மாத்யூசும் போய் வந்தனர். அங்கு என்ன பேசினோம். கட்சிப் பிரதிநிதிகளாக அல்ல எனவே சொல்வதற்கு ஏதும் இல்லை என லுது கூறினார். வெள்ளையர்களிடம் பேசியதை எங்களிடம் சொல்ல மறுப்பது ஏன்? என மண்டேலா பாய்ந்தார். லுதுலி மிக நிதானமாக மண்டேலாவைப் பார்த்து மாணவப்பருவத்தை இப்பொழுது தான் தாண்டியிருக்கிறாய் வெள்ளையர்களைப் பற்றி நீ அறியமாட்டாய் ! என்றார். மேலும் வெகுண்டார்மண்டேலா நான் தலைவர் பதவியிலிருந்து விலகுகிறேன் என்றார் இந்தச் செய்தி மண்டேலாவை மிரள வைத்தது.

(தொடரும்)

## இசற்கோர் வெட்டுப்புள்ளிகள் அடுத்த வாரம் வெளியாகும்

(கொழும்பு)

கடந்த ஆண்டுக.பொ.த. உயர் தரப் பரீட்சையல் தோற்றிய மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பது தொடர்பான இசற்ஸ் கோர் வெட்டுப் புள்ளிகள் அடுத்த வாரம் வெளியிடப்பட இருக்கின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

திருத்தப்பட்ட பெறுபேறுக்கமைய மாற்றியமைக்கப்பட்டுள்ள வெட்டுப் புள்ளிகளே இவ்வாறு வெளியிடவுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, விடைத்தாள்கள் மீளவும் திருத்தப்பட்ட பின்னர் பல்கலைக்கழக அனுமதி பெற்ற 995மாணவர்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இம் முறை கூடுதலான மாணவர்கள் அனுமதிக்கப்படுவதால் பல்கலைகழகங்களில் உள்ள வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை, பல்கலைக் கழகங்களில் நிலவும் குறைபாடுகளை தமது கவனத்திற்கு கொண்டு வருமாறு துணைவேந்தர்களுக்கு தம்மால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழகமானிய ஆணைக் குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

அதேசமயம் க.பொ. த.சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளையும் அடுத்த வார முற்பகுதியில் வெளியிட இருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் நடைமுறையில் சர்ச்சைக்குரிய எம்.ஏ.ஆர். இயந்திரங்களைப்பயன்படுத்தவில்லையெனவும் அவர் தெரிவித்தார். (க-7)

## இலங்கையருக்கு வேலைவாய்ப்பு வழங்க இங்கிலாந்து அரசு இணக்கம்

(கொழும்பு)

எதிர்வரும்காலங்களில் இலங்கையர்களுக்கு இங்கிலாந் தில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான தீர் மானத்தை இங்கிலாந்து அரசாங்கம் எடுத்துள்ளது.

இத் தீர்மானத்தின் மூலம் இலங்கையர்களுக்கு பெருந் தொகைஊதியத்துடனானதொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளும்வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக தொழில் உறவுகள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அதாவுடன செனவிரத்ன அண்மையில் சர்வதேச புலம்பெயர்வாளர்களுக்கான அமைப்பின்பிரிட்டன்பணிப்பாளர் நாயகம் ஜான் டீ வைல்ட் உடன் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளார்.

அதனடிப்படையில் எதிர்வரும் காலங்களில் தாதி உதவி மருத்துவத் தாதி மற்றும் பயிற்றப்பட்ட தொழிலாளர்களுக்கான தொழில் வாய்ப்பு கள் இங்கிலாந்தில் கிட்டவுள்ளன.

இதற்கான விசேட செயற் திட்டமொன்று வெளிநாட்டு வேலை வாய்ப்புதிணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவுள்ளது. (க-7)

## தூவல் நீர்ப்பாசனத்திற்கு இலங்கை வங்கி கடனுதவி

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ். மாவட்டத்தில் தூவல் நீர்ப்பாசனத்தின் முக்கியத் துவம் கருதி விவசாயிகளிற்கு தூவல் நீர்ப்பாசனப் பொறிகளைப் பொருத்த குறைந்த வட்டி வீதத்தில் கடன் வசதிகளை வழங்க நடவடிக்கைஎடுத்துள்ளதாக இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் பீ.ஏ. அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

இக்கடன் திட்டம் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், இக் கடன் திட்டத்தின் கீழ் ஆகக் கூடிய தொகையாக ரூபா ஐம்பதாயிரம் வரை கடன் வழங்கப்படவுள்ளதாகவும் இக்கடனை இரண்டு வருட காலத்துள் மீளச் செலுத்தப்பட வேண்டுமெனவும் பத்து சதவீத வட்டி அறவிடப்படும் என்றும் இக் கடன் திட்டத்தில் இணைய விரும் புபவர்கள் தத்தம் பிரதேச விவசாய சம்மேளனத் தலைவரின்சிபார்சுடன் இலங்கை வங்கியில் கணக்குவைத் திருக்கும் இரு விவசாயிகளினது பிணையுடன் இக்கடனைப்பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

இப்பொறிகளைப் பொருத்த விரும்பும்விவசாயிகள் தத்தம்பகுதி பெரும்பாக உத்தியோகத்தர்கள் ஊடாகயாழ். மாவட்ட அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசனுடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்தார். (கு)

## சளிச்சுரத்தால் பீடிக்கப்பட்ட 6 பேர் காலியில் மரணம்

நிமோனியா என்ற சளிச்சுரத் தால். பாதிக்கப்பட்டு காலி கராப்பிட்டி போதனாவைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்ட ஆறு நோயாளிகள் மரண மடைந்துள்ளமை பற்றி சுகாதார அமைச்சு விசேட கவனம் செலுத்தியிருக்கிறது. சாஸ்ஸ் மற்றும் பறவைக் காய்ச்சலாக இருக்குமோ என்ற சந்தேகத்தில் சுகாதார அமைச்சின் பொறுப்பில் இயங்கும் தொற்றுநோய் தடுப்பு பிரிவின் ஊடாக இது குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அமைச்சுவிடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவைச் சேர்ந்த அதி காரிகள் வைத்தியசாலைக்குச் சென்று சோதனைகளை ஆரம் பித்துள்ளார்கள் அத்துடன் நிமோனியா நோயினால் பீடிக்கப்பட்வர்களின் இரத்த மாதிரிகளை கொழும் புக்கு எடுத்து வந்து பரி சோதனைகளை மேற்கொள்கிறார்கள். எவ்வாறேனும் சளிச் சுரத்தால் பீடிக்கப்பட் ஆறுநோயாளிகளும் எவ்வாறு மரணித்தார்கள் என் பது இன்னமும் கண்டறியப்பட வில்லை. (க-7)

## பிறப்புக்களை பதியாதவர்களின் நலன்கருதி நடமாடும் சேவை

பிறப்பு இறப்பு பதிவாளர் நாயக அலுவலகத்தின் நடமாடும் சேவை கரவெட்டி பிரதேச செயலகத்தில் இம் மாதம் 20ஆம்திகதி நடைபெறுமென கரவெட்டி பிரதேசசெயலர் எஸ். சத்திய சீலன் அறி வித்துள்ளார்.

இவற்றுக்கு உதவிப் பதிவாளர் நாயகம் வடக்கு ந.சதாசிவ ஐயர் பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் திருமதி சரஸ்வதி தியாகராஜன் உட்பட பல உத்தி யோகத்தர்கள் சமூகமளிக்கவுள்ள னர்.

இதேவேளை, பிறப்புக்கள் பதியப்படாதவர்கள்உரியஆவணங்களுடன் அன்றைய தினமே சமூகமளித்து பிறப்புக்களை பதிவு செய்து மேலதிக விபரங்களுக்கு பருத்தித்துறை காணி பதிவகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும்அறிவிக்கப் பட்டுள்ளது. (க-52)

## இன்று ஒரு தகவல்

# அத்வைதம்

ஒரு ஊரில் ஒரு முனிவர் இருந்தார்(ரிபு). அவருக்கு ஒரு சிஷ்யர் இருந்தார்(நிதார்). ஒரு சமயம் அந்த முனிவர் எங்கேயோ வெளியே கிளம்பிப்போனார். ஆயிரம் வருடம் என்று கேட்கக் கூடாது. முனிவர்களுக்கு அதெல்லாம் மிகவும் சுலபம்.

ஆயிரம் வருடம் கழித்து அவர் திரும்பி வந்ததனால் அந்த சிஷ்யருக்கு அவரை அடையாளம் தெரியவில்லை. தனது குருதான் இருந்தாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இருந்தாலும் யாரோ ஒரு பெரிய முனிவர் வந்திருக்கிறார் என்று நினைத்தார். பசிக்கிறது சாப்பாடு தா என்று கேட்டார் முனிவர். உடனே அந்த சீடர் தன் மனைவியிடம் சொல்லி ருசியாக சமைக்கச் சொன்னார். சாப்பாடு போட்டார்.

முனிவர் சாப்பிட்டு முடிந்ததும் "என்ன திருப்தியாக சாப்பிட்டீர்களா?" என்று கேட்டார். முனிவர் நிமிர்ந்து பார்த்தார். "நான் எங்கே சாப்பிட்டேன். எவனுக்குப் பசியோ அவன் தான் சாப்பிடுவான். அவனுக்குத்தான் திருப்தி ஏற்படும்" என்றார். சிஷ்யருக்கு ஒன்றும் புரியவில்லை. பரிதாபமாக முனிவரைப் பார்த்தார். அவர் சொன்னார். "இப்போது சாப்பிட்டது நான் இல்லை! எனது தேகம் அதனால் தேகத்திற்குத்தான் திருப்தியோ அதிருப்தியோ ஏற்படும். நான் ஆன்மா எனக்கு அதில் திருப்தியோ அதிருப்தியோ இல்லை" என்றார்.

உடனே அந்த சிஷ்யருக்கு இவர்தான் நமது குரு என்பது ஞாபகத்திற்கு வந்து விட்டது. அவரது காலில் விழுந்து வணங்கினார். அதன்பின் மறுபடியும் அந்த குரு வெளியே கிளம்பிப் போய் விட்டு ஆயிரம் வருடம் கழித்துத் திரும்பி வந்தார். திரும்பி ஊருக்குள் வந்து கொண்டிருக்கிறார். அந்தச் சமயம் அந்த சிஷ்யர் ஏதோ ஒரு மூட்டையை (துர்ப்பைப்புல்) தலையில் வைத்துக் கொண்டு தெருவோரமாக நின்று கொண்டிருக்கிறார். முனிவர் அதைப் பார்த்து விட்டு அருகில் சென்றார்.

இப்போதும் அந்த சீடர் குருவை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. "ஏன் இப்படி தெருவோரமாக ஒதுங்கி நின்று கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார் முனிவர். "ராஜா யானை மீது உட்கார்ந்து பவனிவந்து கொண்டிருக்கிறார். அதைத் தான் இப்படி ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்றார் சிஷ்யர்.

முனிவர் பார்த்தார் 'அது சரி..அதில் யார் ராஜா? எது யானை?' என்று கேட்டார். சீடர் ஆச்சரியத்துடன் முனிவரைத் திரும்பிப் பார்த்து அதற்கு விளக்கம் கொடுத்தார். "அதாவது மேலே இருக்கிறாரே அவர் தான் ராஜா. கீழே இருப்பது தான் யானை" என்றார். "அது சரி மேலே என்று சொல்கிறாயே அப்படியென்றால் என்ன? கீழே என்று சொல்கிறாயே அப்படியென்றால் என்ன? என்றார் முனிவர்.

அதைக் கேட்டதும் இவருக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது. உடனே என்ன செய்தார் தெரியுமா? அப்படியே ஒரே தாவாகத்தாவி அந்த முனிவரின் தோள் மீது போய் உட்கார்ந்தார். உட்கார்ந்து கொண்டு சொன்னார். "மேலே என்றால் என்ன கீழே என்றால் என்ன என்று தானே கேட்டீர்கள்.

இதோ நான் மேலே இருக்கிறேன். நீங்கள் கீழே இருக்கிறீர்கள்" என்றார். முனிவர் அப்போதும் விடவில்லை. அடுத்த கேள்வியைக் கேட்டார். அது சரி! நான் மேலே நீ கீழே என்று சொல்கிறாயே! நான் யார்? நீ யார்" என்று கேட்டார். அப்போதுதான் அந்த சிஷ்யருக்கு வந்திருப்பது தனது குரு என்பது புரிந்தது. காலில் விழுந்து வணங்கினார்.

அத்வைதம் என்றால் என்னவென்பதை விளக்குவதற்காக ஜகடபாதர், அரசர் ரகூகுணனுக்கு எடுத்துச் சொன்ன கதையாம் இது. ஒரு பெரியவர் ஒரு பிரசங்கத்தில் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதை இங்கே எடுத்துச் சொல்லவேண்டுமென்று ஆசைப்பட்டேன் அவ்வளவு தான்.

நம்மிலும் அத்வைதம் தெரிந்தவர்கள் நிறையப்பேர் இருக்கின்றனர். உதாரணத்திற்கு ஒன்று பார்ப்போமா?

ஒரு பரீட்சை மண்டபத்தில் மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கு உட்கார்ந்திருந்தனர். ஆசிரியர் முதலில் விடை எழுதுவதற்கான பேப்பர் கொடுக்கிறார். மாணவர்கள் அதை வாங்கி அதில் இலக்கமிடுகின்றனர். அடுத்ததாக வினாத்தாள் கொடுக்கிறார். எல்லோரும் வாங்கினார்கள்.

"எல்லோரும் பொறுமையாக வினாக்களைப் படித்துப் பார்த்துவிட்டு தெளிவாக விடை எழுதுங்கள். யாருக்காவது இது சம்பந்தமாக ஏதாவது சந்தேகம் இருக்கிறதா?" என்று கேட்கிறார் ஆசிரியர். "ஆமாம் சார்!" என்று எழுந்திருக்கிறான் ஒரு மாணவன். "என்ன சந்தேகம்?" என்று கேட்டார். "சார். இதில் எது வினாத்தாள்? எது விடைத்தாள்?" என்று கேட்டான் மாணவன். இது ஒரு விதமான அத்வைதம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு

## பிரதி அமைச்சர் நஜீப் ஏ. மஜீத்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையில் எவ்வித தடைகள் வந்தாலும் நிலையான சமாதானத்தை அடைவதில் அரசாங்கமும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் உறுதியாக உள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரும் மாகாண சபைகள் உள்ளூராட்சி பிரதியமைச்சருமான நஜீப் ஏ.மஜீத் தெரிவித்தார்.

நாட்டில் நிலையான சமாதானம் ஏற்படவேண்டும் என்பதுவே அனைவரதும் எதிர்பார்ப்பாகும் .

அதனை அடைவதற்கு சகல தரப்பினரும் விட்டுக் கொடுப்பு மிக்க அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில் தம்பலகாமம் பிரதேச சபைக்குத் தெரிவான உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏ.எம். வாஹீடை தலைவராக கொண்ட ஒன்பது உறுப்பினர்கள் அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் சகல மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதுவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நோக்கமாகும் . பிரதேச தலைவர்கள் தூர நோக்குடன் செயலாற்ற வேண்டும்.

மஹிந்த சிந்தனையில் குறிப்பிட்டுள்ளபடி கிராமங்களையும் பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு உள்ளூராட்சி மன்றத்திற்கு தெரிவானவர்கள் வேறுபாடுகளுக்கு அப்பால் பணியாற்ற வேண்டும் என்றும் அமைச்சர் நஜீப் ஏ.மஜீத் சுட்டிக்காட்டினார்.

தம்பலகாமம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் அமைச்சர் நஜீப் ஏ. மஜீத் பிரதேச சபை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

(க–7)

# உள்ளூராட்சி மன்ற அமர்வுகளில் பங்குபற்றாதவர் மீது நடவடிக்கை!

## எடுக்கப்படும் என்கிறார் அமைச்சர் மைத்திரிபால

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற அமர்வுகள் மற்றும் அது தொடர்பான வைபவங்களில் வேண்டுமென்றே கலந்து கொள்ளாது புறக்கணித்து நடப்பவர்களுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதற்கென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழு நிரந்தர ஒழுக்காற்று விசாரணைக் குழுவை விரைவில் நியமிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும் உபதலைவர்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டனர்.

இவ்வைபவத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது?

உள்ளூராட்சி மன்ற அமர்வுகளில் உறுப்பினர்களில் பலர் ஒழுங்கு முறையாகக் கலந்துகொள்வதில்லை என்று கடந்த காலங்களில் குற்றஞ் சாட்டப்பட்டது.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கு முகம் கொடுத்தவர்களுக்கும் தாம் கடந்த தேர்தலில் போட்டியிட இடமளித்தோம்.

இனிமேல் அவ்வாறு புறக்கணித்து நடக்கக் கூடாது. அவ்வாறு நடப்பவர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சமூக சேவையாளர்கள் என்பதை மறந்து விடக் கூடாது என்றார்.

(க–7)

# வைத்தியர்கள் ,தாதியர்கள் வேலை நிறுத்தத்தில் குதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடி அரச வைத்திய சாலையில் வைத்தியர்களும் தாதியர்களும் நேற்று முன்தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலைக்குள் புகுந்த 20 பேர் வரையிலான இளைஞர்கள் குழுவொன்று வைத்தியர்களையும், தாதியர்களையும் தாக்கியதோடு வைத்தியசாலைக்கும் பாரிய சேதங்கள் ஏற்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் வைத்தியசாலைக்குள் புகுந்து தம்மீது தாக்குதல் நடத்திய இளைஞர்களை கைது செய்யக்கோரியே இந்த பணிப்புறக்கணிப்பு மேற் கொள்ளப்பட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளார்கள். (க–9)

# பதில்துணைவேந்தர் பதவியை ஏற்க பேராசிரியர் பரமேஸ்வரன் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராக விஞ்ஞான சிரேஷ்ட பேராசிரியர் பரமேஸ்வரன் நேற்று முன்தினம் காலை பதவியேற்றார். எனினும் நேற்று முன்தினம் மாலை அவர் தனது நியமனக் கடிதத்தை இரத்துச் செய்யுமாறு பதிவாளருக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் கடந்த பெப்ரவரி மாதம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார். எனினும் மாணவர்களின் எதிர்ப்புக் காரணமாக அவர் பதவியேற்க முடியவில்லை. இதனையடுத்து பேராசிரியர் பரமேஸ்வரனை அவர் பதில் துணைவேந்தராக நியமித்தார். இந் நிலையில் நேற்று முன்தினம் தான் பதில் துணைவேந்தராகப் பதவியேற்றதாக பதிவாளர்களுக்கு கடிதம் அனுப்பிய பேராசிரியர் பரமேஸ்வரன் நேற்று முன்தினம் மாலையே தனது பதவியை இராஜினாமாச் செய்வதாக மற்றொரு கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை, மாணவர்கள் கடும் எதிர்ப்புக் காரணமாகவே பேராசிரியர் பரமேஸ்வரன் பதில்துணைவேந்தர் பதவியை இராஜினாமாச் செய்ததாக மாணவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ச–5)

# ஹோமியோபதி வைத்தியமுறையின் மூலம் சிறுநீரக நோய்க்கு சிகிச்சை

ஹோமியோபதி வைத்திய முறையின் மூலம் சிறுநீரக நோய்க்கு சிகிச்சையளிப்பது சம்பந்தமாக ஆராய்ச்சிகளை நடத்துமாறு சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த அமைச்சின் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இவ் வைத்திய முறையின் மூலம் சிறுநீரக நோயைக் குணப்படுத்த முடியுமென்று அண்மைக் காலத்தில் ஹோமியோபதி வைத்தியர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்நோயை ஆரம்பித்திலேயே கண்டறிவதன் மூலம் இதனை இலகுவாக குணப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமிய பாரம்பரிய வைத்திய முறைகள் மூலம் சிறுநீரக நோயைக் குணப்படுத்த ஹோமியோபதி முறையின் கீழ் நடவடிக்கை எடுக்கமுடியுமாதலால் இது விடயமாக சுதேச வைத்திய அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க–7)

# தேசிய பாசறை நிகழ்வில் வட்டு-இந்து முதலிடம்

யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிச்சங்கம் ஒழுங்கு செய்த பாடசாலை மாணவர்களிற்கான தேசிய பாசறை நிகழ்வில் இம்முறை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி 107 அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்று சம்பியனாகியது.

மேற்படி தேசிய பாசறையானது கடந்தவாரம் இறுதியில் மூன்று தினங்கள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்றது. இப் பாசறையிலே இம் முறை யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்வி வலயங்களையும் சேர்ந்த 48 பாடசாலைகள் பங்கு பற்றியிருந்தது.

இரண்டாம் இடத்தை 92 புள்ளிகளைப் பெற்று யா/ தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலையும் மூன்றாம் இடத்தை 75 புள்ளிகளைப் பெற்று யா/உடுப்பிட்டி அமெரிக்க மிசன் பாடசாலையும் நான்காம் இடத்தை 68 புள்ளிகளைப் பெற்றுகொக்குவில் இந்துக் கல்லூரியும் ஐந்தாம் இடத்தை 67 புள்ளிகளை பெற்று கர வெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் பெற்றுக்கொண்டது.

இப் பாசறையின் போது உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கிரிக்கெற், செஸ், கரம், பாலம் அமைத்தல், சிகரம் அமைத்தல், அணி ஒழுங்கு, திசையறிதல், சுவையறிதல், அணிநடை, தீப்பாசறை, ஒழுக்கம் போன்வற்றில் பாடசாலைகளிற்கு இடையில் போட்டிகள் நடைபெற்று புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுகள் மேற் கொள்ளப்பட்டதாகவும் மேற்படி பாசறையின் இணைப் பாளரும் மேலதிக ஆணையாளருமான ப.ரஞ்சித்குமார் தெரிவித்துள்ளார்.

மேற்படி பாசறையில் கலந்துகொண்ட மாணவர்களிற்கும் வெற்றி பெற்ற பாடசாலைகளிற்கும் இறுதி நாள் நிகழ்வில் சான்றிதழ்களும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (க–252)

இலட்சியம் இல்லாதவர் மனம் நிலையான தாயிராது. அடிக்கடி சலனப்படும். . என்ன செய்கின்றோம். எங்கு போகின்றோம். எதைச் செய்வது என்ற முறைமை இல்லாமல் வாழ்வு கெட்டுவிடும். -சுவாமி இராமதாசர்

வலம்புரி

# பேச்சுக்கள் குழம்பினால் யுத்தம் வெடிப்பது உறுதி

ஜெனீவா இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெறாமல் போகுமாயின் அதன் முடிபு யுத்தமாகவே இருக்கும்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் சம்மதம் தெரிவித்தனர்.

அதன் காரணமாக யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கான முதலாம் சுற்றுப் பேச்சுவார்த்தை ஜெனீவாவில் இடம்பெற்றது.

இரண்டு தினங்கள் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தையில் அரசும், விடுதலைப் புலிகளும் இணக்கப்பாடு கண்ட விடயங்கள் இரு தரப்பாலும் அமுல்படுத்தப்பட வேண்டியவை.

குறிப்பாக யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் முக்கிய சில விடயங்களை செய்தாக வேண்டும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை சரியான முறையில் அமுல்படுத்தப்படவில்லையாயின் ஜெனீவாப் பேச்சுவார்த்தை சாத்தியமற்றுப் போகும் என்பதில் ஐயமிருக்க முடியாது.

ஏனெனில், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் அரசுடன் பேச்சு நடத்துவதில் விடுதலைப்புலிகள் முக்கியமானதோர் விடயத்தை முன்வைத்திருந்தனர்.

அதாவது, அரசுடனான பேச்சுவார்த்தை என்பது சமாதானம் பற்றியதல்ல. முதலில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது குறித்தே பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்குச் செல்ல முன்னர். யுத்தநிறுத்த உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் செம்மையாக அமுல்படுத்தப்பட்டாக வேண்டும்.

அரசும்விடுதலைப்புலிகளும் இணங்க்கி கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை செம்மையாக அமுல்படுத்தப்படவில்லையாயின் 'சமாதானம்' என்ற பேச்சு சாத்தியமற்றதாகும்.

இது விடுதலைப்புலிகளின் முடிபு. இதற்கு அரசு இணங்கியதற்கமையவே முதலாம் சுற்று ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் விடுதலைப்புலிகள் பங்கு பற்றினர்.

இப்போது இரண்டாம் சுற்று ஜெனீவா பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் பங்கு பற்றுவார்களா? இல்லையா? என்ற முடிபை முதற்சுற்றுப் பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் அரசு எந்தளவு தூரம் செயற்படுத்தும் என்பதே தீர்மானிக்கும்.

இதனையே அரசியல் ஆய்வாளர்கள் தமது ஆய்வின் முடிபாக எடுத்திருந்தனர். ஆனால் அந்த நிலைமை மாறி விடுதலை புலிகளின் பயணத்தில் அரசு தேவையற்ற தீர்மானங்களை எடுக்கப்போய் எல்லாமே குழம்பிப் போய் விட்டது.

விடுதலைப்புலிகளின் கிழக்கு தளபதிகளுக்கு அரசு விமான சேவை வழங்குவதால் என்னதான் குறைந்துவிடும்.

ஓடியோடி இலக்குத் தவறி யுத்த விமானம் குண்டு போடுவதைவிட சமாதானத்திற்காக விடுதலைப்புலிகளுக்கு விமானப் பயணச் சேவையை வழங்குவது நல்லதல்லவா?

என்ன செய்வது! குறுகிய மனப்பாங்கு இப்போது நிலைமையை மோசமடையச் செய்து விட்டது.

# சமூகச் சீரழிவுகளை ஒழிப்பதில் மாணவர்களுக்கும் பங்குண்டு!

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் பாடசாலைக் கல்வியுடன் மட்டும் நின்று விடாது சமூகத்திற்கு பயனளிக்கக்கூடிய சேவைகளிலும் பங்குபற்றுவது காலத்தின் தேவை எனத் தெரிவித்தார் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் அதிபர் எஸ். அகிலதாஸ்.

யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச்சங்கமும் படையணிகளும் இணைந்து நடாத்திய தேசிய பாசறை நிகழ்வுகள் கடந்த வார இறுதியில் மூன்று தினங்கள் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் நடைபெற்றன இதில் இறுதி நாள் நிகழ்வின் போது நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய அதிபர்,

இன்று யாழ். மாவட்டத்தில் களவுகள், கசிப்பு பாவனை, விவாகரத்து பிரச்சினைகள், வீதி விபத்துகள் எனப் பல்வேறு குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. மாணவர்கள் சமூகத்தில் இணைவதற்கு இவ்வாறான பொதுவிடயங்களில் ஈடுபடுவது மிகவும் அவசியம். அத்துடன் மாணவர்கள் பெரியோரைக் கனம் பண்ணுதல், ஆசிரியர்களை மதித்தல் பெற்றோரை கனம் பண்ணுதல் போன்ற விடயங்களில் கவனம் எடுப்பது மிககுறைவாகவே உள்ளது.

எனவே ஒரு மாணவருக்கு தலைமைத்துவ பண்புகள் மற்றும் சமூக விழுமியங்களை மதிக்கும் பண்புகள் இருப்பது மிகவும் அவசியம். இவ்வாறான பாசறைகள் மூலம் மாணவர்கள் நல்ல பழக்கங்களை கற்றுக் கொள்ள முடியும் மேலும் இவ்வாறான பாசறைகளை அடிக்கடி நடாத்துவதன் மூலம் மாணவர்களும் சிறந்த பயிற்சிகளை வழங்கலாம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கொக்குவில் இராகிருஷ்ண வித்தியாலய அதிபர் சிவபாதசுந்தரம், சங்கத் தலைவர் வைத்தியர் சற்குருநாதன் மற்றும் கிராமசேவையாளர் ஆகியோரும் உரைநிகழ்த்தினார்கள்.

இத்தேசிய பாசறை நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் உள்ள 48 பாடசாலைகளிலிருந்து சுமார் 540 க்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சிகளை பெற்றுக் கொண்டனர்.

வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கு சான்றிதழ்களும் கேடயங்களும் பரிசுகளும் பிரதம விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்களால் வழங்கப்பட்டன.

(து-252)

# அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க 46வது ஆண்டு நிறைவுக் கூட்டமும் சைவப் புலவர் பட்டமளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 46ஆவது ஆண்டு நிறைவு பொதுக் கூட்டமும் சைவப் புலவர் பட்டமளிப்பு விழாவும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளையின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானப் பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் அருள் ஆசியுரையை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள் வழங்குவார்.

வாழ்த்துரையை கலாநிதி சைவபூசணம் வ.கந்தசாமி வழங்குவார். பட்டமளிப்பு பேருரையை பேராசிரியர் இ.குமாரவடிவேல் நிகழ்த்துவார்.

சிறப்புரைகளை மட்டக்களப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர் சைவப் புலவர் சாமித்தம்பி தில்லைநாதன் மற்றும் ஊர்காவல்துறை கலாசார உத்தியோகத்தர் சைவப் புலவர் இ. நித்தியானந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 2005 ஆம் ஆண்டில் சைவப் புலவர், இளம் சைவப் புலவர் தேர்வில் சித்தியடைந்தவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் புராணப் படனப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறும். (க)

# கிளி .கந்தபுரத்தில் பேராளர் சங்கமம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கமம் கந்தபுரம் இல-01பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ப. சபாரட்ணம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் அருள் ஏற்றினார்.

அன்னை பூபதி உருவப்படத்திற்கு சுடரேற்றி மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் அ.வேழமாலிகிதன் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையைச் சேர்ந்த அ.பசுபதிப்பிள்ளை, கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் அருள் உட்பட பலர் கருத்துரைகளை நிகழ்த்தினர். (க)

# நிவாரண நடவடிக்கையை கண்காணிக்க உத்தியோகத்தர்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் அனைத்து கொடுப்பனவுகளும் செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வெளிக்கள உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலும் குறிப்பிட்ட உத்தியோகத்தர் தனது கடமைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார். அனர்த்த நிவாரணக் கண்காணிப்பு என்பது அனைவரும் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற அடிப்படையில் சமமான முறையில் அனைத்துக் கொடுப்பனவுகளையும் பெறவேண்டும் என்பதற்காகவே இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டத்தின் இணைப்பாளரான தம்பித்துரை ரஜீவன் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் எவரும் பால், மத, இன வேறுபாடுகளுக்கு உள்ளாக்கப்படக் கூடாது என்பதனை கருத்தில் கொண்டு செயல்பட இந்த அமைப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் யாரும் பாதிக்கப்பட்டால் தமக்கு முறையிடுவதன் மூலம் பாதிக்கப்பட்டவருக்கு உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். (க)

# கொழும்பு மாநகர சபை சிறப்பு ஆணையாளராக ஓமர் கமில்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் சிறப்பு ஆணையாளராக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் கொழும்பு மேயர் ஓமர் கமிலை அரசாங்கம் நியமித்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் நேற்று செவ்வாய்க் கிழமை இரவு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதேவேளை இந்தப் புதிய பதவிக்கான ஆணை விரைவில் கிடைக்கும் என்று நம்புவதாக ஓமர் கமில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே கொழும்பு முன்னாள் மேயர் குணவர்த்தன மற்றும் பிரதிமேயர் ஆசாத்சாலி ஆகியோர் தங்களுக்கான அலுவலகங்களி லிருந்து வெளியேறியுள்ளனர். (க)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



ஆசைவசப்பட்டு உடலுடனும் மனதுடனும் நம்மைப் பிணைத்துக் கொண்டு உலகின் சுக போகங்களை நாடி புறவளர்ச்சியில் கவனம் செலுத்தும் தோறும் நாம் மேலும் மேலும் பிறவிகளுக்கு உள்ளாகிறோம். மாறாக ஆன்மாவுடன் நம்மை ஒன்றுபடுத்திக் கொண்டு அக வளர்ச்சியில் நாட்டம் செலுத்தும் தோறும் இறை நிலையை அடைந்து மரணத்தை வெல்கிறோம்.

# புதிய வகையில் அமைக்கப்படும் இராணுவத்தின் வீதித் தடைகள்

## மக்கள் விசனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரால் சோதனைக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிய வகையிலான வீதித் தடுப்புகளையும் இராணுவத்தினர் ஏற்படுத்தி வருகின்றனர்.

மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளில் செல்வோர் இறங்கிச் செல்லும் வகையில் இராணுவத்தினர் வீதிகளை ஆழமாகத் தோண்டி வருகின்றனர். இதனால் சகலரும் இறங்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

முக்கிய சில சந்தியின் நான்கு பக்கங்களும் வீதிகள் தோண்டி விடப்பட்டுள்ளன. திடீரென ஏற்பட்ட வீதித் தடையால் பல சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிளில்கள் சேதமடைந்தன.

இத் தடைகுறித்து விசனம் தெரிவித்த வயோதிபர் ஒருவர் நேற்று மாலை பிறவுண் வீதியில் வைத்து இராணுவத்தால் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டார்.

இதேவேளை யாழ்.நகரப் பகுதியில் நேற்று காலை முதல் பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீதிச் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. இதனால் யாழ்.நகரின் அன்றாடச் செயற்பாடுகள் சோபையிழந்து காணப்பட்டது.

இது இவ்வாறிருக்க நேற்றிரவு மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளையில் இராணுவத்தினர் தமது பாதுகாப்பிற்காக ஆட்டோக்கள் சிலவற்றை மறித்து அவற்றின் வெளிச்சத்துடன் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இராணுவத்தின் இவ்வாறான செயற்பாடுகள் குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர். (சு-133,122,5)

## வெடிமருந்துகளுடன் இருவர் கைது

(புத்தளம்)

புத்தளம் கற்பிட்டிப் பிரதேசத்தில் வெடிமருந்துகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடற்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து கற்பிட்டி மாதல்வாடியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது 550 கிராம் வெடிமருந்து, கைக்குண்டின் சிறுபாகம் மற்றும் வாள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் இருவர் சந்தேகத்தின் பேரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவை மிகவும் சக்தி வாய்ந்த வெடிமருந்துகள் என சந்தேகிக்கப்படுகின்றன.

கைப்பற்றப்பட்ட வெடிமருந்து இரசாயன பகுப்பாய்வுக்கென கொழும்பிற்கு அனுப்பப்பட்டுள்ளது. (சு-4,5)

## வேட்டைக்குச் சென்ற மூவர் வவுனியாவில் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா பெரியமடுக் காட்டுப் பகுதிக்குள் வேட்டைக்குச் சென்ற மூவர் சடலமாக மீட்கப்பட்டனர்.புளியங்குளம் பனிக்கை நீராவி, பெரியமடுப் பகுதியிலிருந்து பெரியமடுவைச் சேர்ந்தவர்களான தியாகராஜா குகனேஸ்வரன்(வயது-36), சிவசம்பு நகுலேந்திரராஜா (வயது-44) மற்றும் சேமமடுவினைச் சேர்ந்த சிவகுரு பிரவியன் (வயது-32) ஆகியோர் வேட்டைக்காக பெரியமடுக் காட்டுப் பகுதிக்குள் தங்களது நான்கு நாய்களுடன் கடந்த வியாழக்கிழமை சென்றனர்.

ஆனால் இவர்கள் வீடு திரும்பவில்லை என்று உறவினர்களால் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரிடமும் முறையிடப்பட்டது.

கடந்த ஐந்து நாட்களாக காணாமல் போனோரை அவர்களது உறவினர்கள் தேடி வந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் மூவரது சடலங்களையும் அவர்கள் கண்டெடுத்தனர்.

மூவரது உடலிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்துள்ளன. அவர்கள் முகத்தில் அசிற் ஊற்றப்பட்ட நிலையில் கருகியிருந்தது. ஒருவரது கழுத்தில் ஆழமான வெட்டுக் காயமும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.(சு-4)

## யாழ்ப்பாண நகரப் பகுதியை பாதுகாப்பு வலயமாக்க முயற்சி

### இணையத்தளம் தெரிவிப்பு

யாழ்.நகரத்தை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தும் முயற்சிகளில் இராணுவத்தினர் நேற்று முதல் ஈடுபட்டுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் தற்பொழுது நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையை தமக்கு சாதகமாகப்பயன்படுத்தி இராணுவத்தினர் இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். அந்த வகையில் யாழ்.நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கான சகல வீதிகளையும் வழி மறித்து வீதித்தடைகளையும் சோதனை சாவடிகளையும் அமைத்து அங்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கான குறியீட்டுப் பலகைகளையும் தொங்க விட்டுள்ளனர். இராணுவம் அவற்றில் நின்றவாறு நகருக்குள் பிரவேசிப்பவர்கள்மீது கடுமையான சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னரே அவர்கள் நகருக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுகின்றனர் என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இதனை யாழ்.பொலிஸார் மறுத்துள்ளனர். (ரு)

## வினாடி வினா போட்டி பிற்போடப்பட்டது

மொறட்டுவ பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றத்தால் எதிர்வரும் 21,22 ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரி குமார சுவாமி மண்டபத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட வினாடி வினா போட்டி தவிர்க்க முடியாத கார ணத்தினால் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக மொறட்டுவ பல்கலைக் கழக தமிழ் இலக்கிய மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (ரு)

---

## இளைஞனின்...

நீதிபதியின் உத்தரவுக்கமைய மருத்துவ பரிசோதனைக்கும் அடையாளம் காண்பதற்குமாக வவுனியா வைத்தியசாலையில் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

இவ் இளைஞனின் மரணத்திற்கு உரிமை கோரியுள்ள தமிழீழத் தேசியப்படை என்ற அமைப்பு இராணுத்தினருக்கு தகவல் கொடுத்தமைக்காக இத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக சடலத்துடன் காணப்பட்ட குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். (சு,4,7)

---

## இன்று...

இருப்பினும் நான்கு வருட காலமாக அமுலில் இருக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கை மிகவும் கடுமையான அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் அதேவேளை எதிர்வரும் 24 ஆம் திகதி ஜெனீவாவில் இடம்பெற ஏற்பாடாகியிருக்கும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நேரடிப் பேச்சுவார்த்தை இடம் பெறுமா என்ற சந்தேகம் நிலவி வரும் இச் சூழலில் பௌயரின் விஜயம் முக்கியமானதாக கருதப்படுகின்றது. (சு-4)

## இராணுவ புலனாய்வுப் பிரிவு அதிகாரி கருணா குழுவுக்கு ஆயுதம் வழங்கினார்

### தயா மோகன் குற்றஞ்சாட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கருணா குழுவினர் மேற்கொள்ளும் வன்முறை நடவடிக்கைகளுக்கு தேவையான ஆயுதங்கள் வழங்குவது மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் என்பவற்றை இராணுவ உளவுப் பிரிவு அதிகாரியான கலீல் மேற்கொண்டு வருவதாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா மோகன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பெண்டுகல்சேனை வாகனேரிப்பகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதல் மேற்கொள்ள முயன்ற கருணா குழுவினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலையடுத்து விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்ட கருணா குழு உறுப்பினர் மேற்கண்ட தகவல் விசாரணையின்போது தெரிவித்ததாகவும் தயா மோகன் தெரிவித்தார்.

இராணுவ உளவாளியான கலீல், சுரேஸ் என்ற புனை பெயரில் நடமாடுவதாகவும் மட்டக்களப்புப் பற்பொடி கொம்பனியிலிருந்து செயற்படும் இவர் கருணாகுழுவிற்கு தேவையான ஆயுதங்களை ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர்கூட வழங்கியிருப்பதாகவும் கைது செய்யபட்ட கருணா குழு உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் பயன்படுத்தும் பி.கே.எல்.எம்.ஜி. ரகஆயுதம் மற்றும் கிளைமோர்க் கைக்குண்டுகள் என்பவற்றை இராணுவப் புலனாய்வு அதிகாரி கலீல், கருணா குழுவிற்கு வழங்கியதாகவும் கருணாகுழுவிற்கும் இராணுவத்திற்குமுள்ள தொடர்புகள் குறித்து பல தரப்பட்ட விடயங்கள் மேற்படி நபர் விசாரணையின்போது தெரிவித்துள்ளதாகவும்

---

புத்தாண்டுப் பலாபலன்கள்
உங்கள் ராசிக்கு எப்படி?
தொடர்ந்து நாளை வெளிவரும்.

## பயிற்சிப் பட்டறை பிற்போடப்பட்டது

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கு இன்றும் நாளையும் நாளை மறுதினமும் தென்மராட்சி பிரதேச செயலக த்தில் நடைபெறவிருந்த மத்தியஸ்த பயிற்சி பட்டறை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசாமி அறிவித்துள்ளார். (சு-108)

---

## இயல்பு நிலை திரும்பும்...

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் எமது மக்கள் கொல்லப்படுகின்றனர். கடைகள் சூறையாடப்படுகின்றன. இந்நிலையில் எதிர்வரும் 24 ஆம்திகதி ஜெனீவாவில் நடைபெறவுள்ள பேச்சில் கலந்து கொள்ள முடியாது. நாங் கள் நிறைய விவாதிக்க வேண்டியுள்ளது.

உதாரணமாக திருகோணமலை இனப்படுகொலை, தமிழ் வர்த்தகர்கள் படுகொலை, எங்கள் மீதான துணை இராணுவக் குழுவினரின் தாக்குதல்கள் எனப் பல விடயங்கள் விவாதிக்கப்பட வேண்டியுள்ளது.

இராணுவமும் சிங்களக் காடையர்களும் தமிழர்களைத் தாக்கியுள்ளனர். நாங்கள் பேச்சுகளுக்கான ஏதுவான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்றுதான் சொல்லுகின்றோம்.

ஜெனீவா முதற்சுற்றுப் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட உடன்பாட்டை ஜெனீவா இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக செயற்படுத்த வேண்டும் என்றார் சி.புலித்தேவன்.

இதேவேளை கிழக்குப் பிராந்தியத் தளபதிகளை அழைத்து வருவதற்கு தனியார் ஹெலி வசதியைப் பெறுவது தொடர்பாக அரசு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

இது தொடர்பாக நாம் எமது தலைமைப் பீடத்துடனும் தொடர்பு கொண்டுள்ளோம். அதுகுறித்த முடிவை நாளை புதிய சமாதானத் தூதுவரின் சந்திப்பின்போது தெரியப்படுத்துவோம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களை நேற்றுக் கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடிய புலித்தேவன் இக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தமது கிழக்குமாகாண தளபதிகளின் வன்னிப் பயணத்திற்கு தனியார் ஹெலியை வழங்குவதென அரசாங்கம் கூறுவது விடுதலைப் புலிகளை ஏமாற்ற எடுக்கும் முயற்சியென சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான பின்னணியில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதில் பயனில்லை எனவும் அவர் கூறினார். (சு-4,5)

---

## ஆயுதக் குழுவை...

மூன்று மகசீன்களுடன் ரி 56 ரகத்துப்பாக்கி,கைக்குண்டுகள் நான்கு ஆகியவை அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் விடுதலைப்புலிகள் அறிவித்தனர்.

கிரான் கோரக்கள்ளி மடுவைச்சேர்ந்த ஞானமுத்து கோகுலன் (வயது 23), கோபாலன் திருவேந்திரன் (வயது 20) மற்றும் பெண்டுகல்சேனை குருத்தனையைச் சேர்ந்த கந்தசாமி சின்னவன் (வயது 24) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் என தெரிவித்த விடுதலைப்புலிகள், சடலங்கள் தற்போது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை மூவரது சடலங்களும் வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான புலிபாய்ந்தகல் பிரதேசத்திற்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு வாகனேரிப் பிரதேசத்தில் ஊடுருவி நடாத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டோரும் பங்கேற்றதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். (சு-4)

நிறைஞ்சு ஸைவில்
பரத், சந்தியா நடித்த
காதல்
சங்கானை கா.நே: 10.30, 2.15, 5.30 ,8.45




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.